பதிவுசெய்யப்பெற்ற பத்திரிகை

விரோதி௵ (1889) ஆவணி௴ உ௳ ஸ்தாபனம்.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—குரோதன௵ கார்த்திகை௴ உ௯௳ (1925 டிசெம்பர் 14) திங்கட்கிழமை. { இலக்கம்—௪௯


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது ஞங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.


## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முராசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை,முகப்புக்கொடி,காஞ்சிஅரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு,வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செசப்பு கம்மல் தோடு கடுக்கன மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித்தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முராசுகுத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புஜ கீர்த்திப், புக்கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம்தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன கோ.,
சருப் ஜவுளி வியாபரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

## அறைக்கீரைவிதைத் தைலம்.



பித்த மேகரோனது சிரசுக்கேற அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடின் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுசந்தம் மாறுது அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை. விபரம் எழுதிக்கேட்கு க.'

ஐம்பகந்தம்மாள்,
8 நம். பிராமஸ் ரோட்
மைலாப்பூர், சென்னை.

(Q 67.)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills L[illegible]) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y.[illegible])

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
மெஞ்ஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

ESTABLISHED, 1909.

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (South Arcot Dt; India.)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

கண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமந் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாணடு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை பூர்வமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

☞ இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறையாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் சீர்சிறந்துவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

### டி லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாதபித்த ச்லேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் [illegible] வீனம் நஸ்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர் [illegible] ருத்தல் ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், நித் [illegible], Spermatorrhea, தேகமெலிவு, [illegible] இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசி [illegible] தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினுல் வி-பி. செலவு இனுமாயனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருநதின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டி யூர்களுக்கு திண்ணமாய் வி. பி, யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டி குருவியன சத்தால் செய்யப்படவில்லை யென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றுவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிக்கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றுவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினுலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ. 1000 இனுமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனுமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினுல் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—
Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ எ. எஸ். எம். எ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை;
தென்னுற்காடு ஜில்லா.

(Y. 38.)

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனரிஸ், பெஙகளுர், சேலம், கோயம்புத்தூர், கொர்னுடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ரூத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பலமாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறேம்.

விலாசம்:

கோ. ப. சீ. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: குரோதன௵ கார்த்திகைமீ [illegible] திங்கட்கிழமை.


## உங்கள் ஒரு வார்த்தையால் உலகம் உய்யும்.

கள் சாராயத் தவறணைகளை நீக்குதற்குச் சனங்கள் சம்மதஞ் சொல்லவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த டிசெம்பர்மீ 10-ம், 11-ம், 12-ம் தேதிகளில், கிழக்கு நாட்டிலேயுள்ள மூன்று கள்ளுத் தவறணைகள் சனச்சம்மதம் பெற்று நீக்கப்படலாயின. தொடக்கம் அநுகூலமாகவிருத்தலால், எல்லாம் அநுகூலமாகவே முடியுமெனக் காத்திருக்கின்றேம்.

யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்க எல்லையுள் இன்னமும் அகற்றப்படவேண்டியிருப்பன, அந்நியநாட்டுக் குடிவகைத் தவறணை யொன்றும், சாராயத்தவறணை இரண்டும், கள்ளுக்கடை மூன்றுமாக ஆறு தவறணைகளாம். இந்த ஆறு தவறணைகளையும் நீக்குதற்குச் சம்மதஞ் சொல்லவேண்டியவர்கள் யாரென்றால், பட்டின பரிபாலன சங்க எல்லையுள்முதலாம் இரண்டாம் ஆறும் எட்டாம் வட்டாரங்களில் வசிப்பவர்களாவர். சென்ற வருடத்தில் நூற்றுக்கு 60 பெயர் விகிதம் சம்மதஞ் சொல்லவேண்டிய இடத்தில் 55 பெயர் விகிதம் சம்மதஞ் சொல்லிவிட்டார்கள். 5 விகிதம் குறைந்தமையினாலேதான் இந்த ஆறு தவறணைகளும் அகற்றப்படாது எஞ்சியிருந்தன. ஆனால், சென்ற வருடத்தில் இத்தவறணைகளை அகற்றுதபடி நம்மவர் சிலர் இரகசியமாக முயற்சிசெய்துவிட்டார்கள். மதுபானத்தை யொழிக்க வேண்டுமென்று முயற்சிசெய்த அபிமானிகள் இவர்களுடைய வஞ்சனையை முந்தி யறிந்தாரல்லர். இந்தமுறையும் சில மதுப்பிரியர் மாறுக முயற்சிசெய்யந் தொடங்கியிருக்கின்றார்களாம். பட்டின பரிபாலன சங்க எல்லையுள் உள்ள தவறணைகளை அகற்றும்படி சம்மதங் கொடுப்பவர்கள், அந்நியநாட்டுக் குடிவகை வேண்டாமென்றும், சாராயம் வேண்டாமென்றும், கள்ளு வேண்டாமென்றும் ஒருவர் மூன்று சம்மதஞ் சொல்லலாம். இவைகளையெல்லாஞ் சம்மதஞ் சொல்வோர் அவதானித்துக்கொள்ளுதல் வேண்டும். மேலும் சம்மதஞ் சொல்லும் முறையை, மதுவிலக்குச் சங்க அபிமானிகள் சம்மதஞ் சொல்வோருக்கு முந்தியே விளங்கப்படுத்துவார்கள்.

அபிமானிகள் சிந்திக்கவேண்டிய இன்னொரு பிரதானமான விஷய மென்னவென்றால், எவ்வளவோ சிரமப்பட்டுப் பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்து இம்மதுக் கடைகளை அகற்றுதற்குச் செய்த முயற்சி தவறுமானால், இத்துணைச் சிரமமும் பொருட்செலவும் வீணாகவல்லவா போய்விடும். சென்ற வருடம் வீண்போய்விட்டன. இம்முறையாயினும் அங்ஙனம் வீணாகிப் போகவிடவொண்ணாது. தலைவரிப்பணங்கொடுப்போர் ஒவ்வொருவரும், அழைப்பாரின்றித் தாமாகச்சென்று கள்ளுக்கடை வேண்டாம், சாராயக்கடை வேண்டாம், அந்நியநாட்டு மதுபானம் வேண்டாம் என்று சொல்லிவிடுதல் வேண்டும். வடமராட்சியிலே எவ்வகையான மதுக்கடைகளுமில்லை. தென்மராட்சியிலும் அப்படியேயாம். பச்சிலைப்பள்ளிப் பகுதியிலும் மதுக்கடை இல்லாதொழியும்போலும். இப்படியெல்லாமிருக்க, பட்டினப்பகுதியில் மாத்திரம் மதுக்கடைகள் அகற்றப்படாதிருக்குமானால், பட்டின வாசிகள் எல்லாருக்கும் இது பேரவமானமாகவல்லவா முடியும்!

சட்டநிருபணசபைப் பிரதிநிதிகள், பட்டினசங்க அங்கத்தவர், வித்தியாசாலை ஆசிரியர்கள், மாணாக்கர்கள், வியாபாரிமார், தொழிலாளர், நியாயதுரந்தரர்கள், மற்றுமுள்ளோர், பெண்கள் ஆகிய எல்லாரும் இம்முறை இந்தச் சற்கருமத்திற் சேர்ந்து உழைக்கவேண்டும். அங்ஙனம் உழைப்பின் நாங்கள் வெற்றியடைவது நிச்சயம்!

இனி, பட்டின எல்லைக்கு அப்புறத்துள்ள ஊர்களில் வசிக்கும் அபிமானிகளும் சாவதானமாகவேயிருத்தல் வேண்டும். கள்ளியங்காட்டிலுள்ள சாராயத்தவறணை பகற்காலத்தில் எந்தநேரம் பார்த்தாலும் மதுபானிகளாற் சூழப்பட்டதாகவேயிருக்கின்றதெனவறியலானேம். சந்தைக்கணித்தாகப் பிரசித்ததெருவிலிருக்கும் இத்தவறணையால் வழிப்போக்கருக்குப் பெரிதும் வசதியீனமுண்டாகின்றதாம். இதனைப்பற்றிச் சம்மதஞ் சொல்வோர் சாவதானமாயிருத்தல்வேண்டும்.

## "மிலேச்ச இலங்கையாம்."

இங்கிலாந்திலிருந்து வெளிவரும் "ஈவினிங் நியூஸ்" என்னும் பத்திரிகை "மிலேச்ச இலங்கை" என்ற தலையங்கத்தின் கீழ் வெளியிட்டுள்ள விஷயத்தை இற்றைப் பிரசுரத்தின் பிறிதோர் பாகத்தில் வெளியிட்டுள்ளோம். இலங்கை முதலான கீழ்நாடுகளில் நிகழும் கொலைகளிற் பெரும்பாலானவை பெண்களின் ஒழுங்கீனங் காரணமாகவே சம்பவிக்கின்றன. பெண்களின் ஒழுங்கீனங்களுக்கு மூல காரணம் மேல் நாட்டாருடைய பழக்க வழக்கங்களும் நவீன நாகரிகச் செயல்களும் அவர்களது விபரீதக் கல்வியும் பிறவும் இங்குப் புகுந்தமையேயாம். கற்புடைய மகளிர்க்குப் பூமி வானம் முகில் சூரியன் சந்திரன் முதலியனவும் தெய்வந்தானும் ஏவல் செய்யுமென்பதும், அத்துணை மகத்துவம் பொருந்திய கற்பைக் "காவறுமே பாவையர்க்கழகு" என்பதும், நாயகனுடைய சொற்றிறம்பாமையுள்ள அவர்களே பெண்மணிகளெனப் படுவரென்பதும், அப்பெண்களுடன் வாழும் இல்வாழ்க்கையையே ஆடவர் எவரும் விரும்புவரென்பதும் நம் கீழ்நாட்டு முறைமையாகும். இந்த முறைமைக்குச் சிறிது இடையூறு நேரினும் ஆடவர் அதனை அபாரமான குற்றமாகக் கருதுவர். ஆகவே இக்காலத்தில் இங்கு அதிகமான கொலைகள் பெண்களின் ஒழுங்கீனங் காரணமாக நிகழ்வதைக் கண்டு இங்கிலாந்திற் பிரசுரமாகும் "ஈவினிங் நியூஸ்" மிலேச்ச இலங்கை யென்று கூறுகின்றது. "ஒரு ஊருக்கு ஏச்சு ஒரு ஊருக்குப் பேச்சு" என்றொரு பழமொழி யுளது. மேல் நாட்டிலே "டைவோர்ஸ்" எனப்படும் விவாகத் தொடர்பை நீக்குதலும் ஒருமுறையாயினும் இருமுறையாயினும் மும்முறை பன்முறையாயினும் அவர்களுடைய மதாசாரப்படி கைப்பிடித்தலுமே கற்பிலக்கணமெனப்படுகிறது. மேல் நாட்டிலே ஒரு பெண் விவாகஞ் செய்த பின்னரும் நாயகனையல்லாத பிறஆடவர்களோடு வார்த்தையாடற்கும் உலாப்போதற்கும் குடித்துவெறித்துக் கைகோத்து "டான்ஸ்" எனப்படும் கூத்தாடுதற்கும் தனியே வசித்தற்கும் பிறவற்றிற்கும் உரிமை உடையவளாயிருக்கின்றனள். உதாரணமாக ஒரு சிறு சம்பவத்தைக் கூறுகின்றேம். மேல்நாட்டிலிருந்து இங்கு வந்து தோட்டத் தலைவராகி அதிக செல்வாக்குடன் இருந்த ஒரு மிஸ்ரர் பலவருடங்களின் பின் இங்கிலாந்துக்குச் சென்று அங்குள்ள ஒரு உயர்ந்த குடும்பத்திலே அழகுள்ள ஒரு பெண்ணை விவாகஞ்செய்து திரும்பி இலங்கைக்கு வந்து சேர்ந்தார். அவரது மிஸ்சேர்ஸ் நான்கு பிள்ளைகளுக்குத் தாயாயினள். அதன்பின் அவ்விலலக்கிழத்தி இங்கிலாந்துக்குச் சென்று பலமாதமாக அங்கிருந்தனள், காலதாமசங்காரணமாக அங்குள்ள டக்ரர் ஒருவருக்கு அப்பெண் மனைவியாயினள். இதனை யறிந்த மிஸ்ரர் இங்கிலாந்துக்குச் சென்று தமது மனைவிமீதேனும் குறித்த டக்ரர்மீதேனும் சிறிதும் மனஸ்தாபமின்றி "டைவோர்ஸ்" எனப்படும் பதவியை விரும்பியும் டக்ரர் தமக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்றும் வழக்குத்தொடர்ந்தார். வழக்கிலே இங்குள்ள மிஸ்ரர் ஜெயமடைந்தார். ஒரு தொகைப் பணமும் அவருக்குக் கிடைத்

# மதுவிலக்கு.

யாழ்ப்பாணம் பட்டினசங்க எல்லைக்குள்

## சம்மதங் கொடுப்போர்

### 1-ம், 2-ம், 6-ம், [illegible]-ம் வட்டார வாசிகள்.

## 1926-ம் ஆ[illegible]மீ 23-ந்திகதி சனிக்[illegible]ழமை.

### நீக்கப்படவேண்டிய தவறணைகள்:

ஒரு அந்நியநாட்டுக் குடிவகைத் தவறணை

இரண்டு சாராயத் தவறணை

மூன்று கள்ளுத் தவறணை.

☞ ஒவ்வொருவரும் இந்த மூன்றுவகைத் தவறணைக்கும் தனித்தனி சம்மதங்கொடுக்கலாம்.

தது. தனியே இலங்கைக்குவந்து சேர்ந்தார். சில வருடங் கழிந்தபின் அந்தப் பெண்ணுக்கும் குறித்த டக்ரருக்கும் மனஸ்தாபமேற்பட்டது. பெண் "டைவோர்ஷ்" எனப்படும் கற்பிலக்கணத்தைப் பெறும் பொருட்டு வழக்குத் தொடர்ந்து அதனைப் பெற்றனள். அந்த மிஸ்சேர்ஸ் இங்குள்ள மிஸ்ரரைப் பின்னரும் விவாகஞ்செய்ய விரும்புவதாக அவருக்கு ஒரு நிருபம் விடுத்தனள். மிஸ்ரரும் அதற்கிசைய விடையிறுத்தார். 'டைவோர்ஸ்' என்னும் அணிகலனையுடைய அப்பெண் சில மாதங்களுள் இலங்கையை யடைந்து ஓர் வாடிவீட்டில் இருந்தனள். இருவரும் விவாக விளம்பரஞ் செய்தனர். அவர்களுடைய மதாசாரப்படி "சேர்ச்" சிலேகாபந்தனஞ் செய்யப்பட்டது. இப்புதிய தம்பதிகள் பரஸ்பரம் ஐக்கியமாகவாழ்ந்தனர். மேல்நாட்டிலே ஒரு மனைவி அயலானுடன் பேசினும் உலாப்போந்தாலும் வசித்தாலும் முதலாம் நாயகனுக்கு இயற்றற சிறிது மனஸ்தாபம் ஒருபோது ஏற்படினும், அது தம் குலத்துக்கும் தமக்கும் தம் நாட்டிற்கும் என்றும் பெரும் வசையும் பாதகமுமாகு மென்பதை அவர்கள் உணருவதில்லை. ஆகவே இந்த விஷயமாகக் கொலை நிகழ்வதற்கும் காரணமில்லை. அங்குள்ள சதியும் பதியும் விருப்பிய காலத்தில் இல்வாழ்க்கைக்கு உடன்படலாம். என்று விருப்பமில்லையோ அன்றைக்கே "டைவோர்ஸ்" பதவியைப் பெற்று மீண்டும் எத்தனை வரனையும் சம்பாதித்துக்கொள்ளலாம். இந்த முறைகளைக் கௌரவமாக மதிக்கும் மேல் நாட்டாருக்குக் கீழ்நாட்டாரது செய்கைகள் குறைவாகத் தெரியலும், இது "மிலேச்ச இலங்கை" யாதலும் நூதனமாகா. இலங்கைக்கும் அது வடுவாகாது. அன்றி எமக்கும் மனஸ்தாபம் சிறிதுமில்லையாம்.

கீழ்நாட்டில் ஒரு ஆடவனும் பெண்ணும் சதிபதிகளாயின் அந்த நேரந்தொடக்கம் மரணபரியந்தம் வாழ்விலும் தாழ்விலும் ஒத்துழைக்கவேண்டியவர்களாக விருக்கிறார்கள். இவர்களுடைய தொடர்பு இப்பிறவியில்மாத்திரமன்றிப் பின்னரும் பல பிறவிகளுக்கும் வித்தாகும். அன்றி இல்வாழ்க்கைக்கு உடன்பட்ட ஒருநாயகி எக்காரணத்தினாலும் தன் நாயகனைவிட்டுப் பிரிதல் கூடாதென்பது கீழ்நாட்டுக் கொள்கை.

இற்றைப் பிரசுரத்திற் பிறிதோர் பாகத்தில் வெளிவரும் "கணவனும் மனைவியும்" என்னும் வியாசம், கீழ்நாட்டுச் சதிபதிகளின் கொள்கையை நன்கு விளக்குகின்றது.

## குமாரபுரம் சித்திரவேலாயுதசுவாமி கும்பாபிஷேகம்.

"வேதாகம சித்திரவேலாயுதன் வெட்சிபூத்த
தண்டைப், பாதாரவிந்த மரணாகவல்லும்
பகது மில்லாச், ஞானதற்ற வெளிக்கே
யொளித்துச் சும்மாவிருக்கப், போதாவினி
மனமே தெரியாதொரு பூதர்க்குமே".

முல்லைத்தீவிற்குச் சமீபமாயுள்ள குமாரபுரமென்னும் புராதன ஸ்தலத்தின்கண்ணே புதிதாக அமைக்கப்பட்ட திருக்கோயிலில் வள்ளிநாயகி தெய்வயானையம்மை சமேத சித்திரவேலாயுத சுவாமிக்கும் விநாயகக்கடவுளுக்கும் மகாகும்பாபிஷேகம், இக்கார்த்திகைமீ [illegible] (26-11-25) வியாழக்கிழமை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் இனிது நடைபெற்று நிறைவேறியது. இப்புராதனாலயத்தின் வரலாற்றை முன்னர் இப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளோம். இவ்வாலயத்திற்குரிய நிலங்களும் பல பொருள்களும் அவ்வூராரால்வைத்து ஆளப்படுகின்றனவென அறியலானேம். கும்பாபிடேகமானபின் அவ்வூரில் வசிக்கும் பயபக்தியுள்ள சனங்களுட் சிலர், தாம் வைத்து உபயோகித்துவந்த பொருள்களுட் சில சித்திரவேலாயுதர் கோயிலுக் குரியனவென்பதைக் கண்டு உடனே தாமாகக் கொண்டுபோய்க் கோவிலில் ஒப்பித்துவிட்டார்களென இப்பொழுது அறிந்தேம். அச்செயல் மிகவும் மேலான செயலாம். இன்னும் அப்படிப்பட்ட பொருளை வைத்திருப்பவரும் கோயில் நிலத்தை ஆட்சிப்பண்ணி வருபவர்களும் பழிக்கஞ்சி அவற்றைக் காலதாமசஞ் செய்யாது மீட்டுச் சித்திரவேலாயுதர் கோயில் நித்தியநைமித்திகம் முட்டின்றி நடைபெறும்வண்ணம் கொடுத்துக் கலியுகவரதராகிய அப்பெருமானுடைய திருவருளைப் பெற்று உய்தல்வேண்டும் சிவதிரவியம் ஒரு குடம் பாலுக்கு ஒருதுளி உறைமோர்போல் எல்லா நிலைமைகளையும் மாற்றிவிடும்.

"அந்தோ, புரமெரித்த அண்ணலடியார் பொருள்கள், செந்தீயினுங் கொடிய தீகண்டாய்—
செந்தீயை, நீங்கிற் சுடாதே நெடுந்தூரம் போனாலும், எங்கச் சுடுமே யிது".

என்றஆன்றோர்வாக்கியத்தை எல்லோரும் மனதில் வைத்துக்கொள்ளுதல்வேண்டும்.

மேலும், நூறு சிவாலயத்தைப் புதியனவாய் அமைத்தலினும் பார்க்க, சிலமுற்ற பழைய ஒரு ஆலயத்தைப் புதுப்பித்து அதன்கண் நித்தியநைமித்திகங்கள் குறைவற விதிப்படி நடக்கச்செய்தல் விசேஷமான புண்ணியமென்று ஆகமங்கள் கூறும். ஆதலினாலே இவ்வாலயத்தில் முன்போல நித்தியநைமித்திகங்கள் நடைபெறச் செய்தல் சைவசமயிகள் கடனாம். சைவசமயிகளுள்ளும் விசேஷமாக முல்லைத்தீவுப்பகுதியி லிருப்பவர்கள்மேற் பொறுத்த கடனாகும். மேற்படி கோவிற் பூசகர், பிரதிஷ்டை செய்வதற்கு மூலமூர்த்திகளைச் செய்விக்கத் திரவியமில்லாமையினால், வேற்பிரதிஷ்டை செய்தல் வேண்டுமென்னும் நோக்கத்துடன் கும்பாபிஷேகத்திற்காகிய சுபதினத்தையும் நிச்சயித்துக்கொண்டு அதற்காகவேண்டிய திரவியங்களை வாங்குதற்பொருட்டும், கும்பாபிஷேக விஞ்ஞாபனம் அச்சிடுவித்தற்பொருட்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது, ஒரு புண்ணியசீலர் 300 ரூபா வரையிற் செலவிட்டுத் தமது உபயமாக அம்மூர்த்திகளையும் மயூரம் பலிபீடம் என்னும் இவைகளையும் செய்வித்து உதவினர். இவைகளே இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஆனால், இவைகளெல்லாம் அச்சித்திரவேலாயுதப் பெருமான் செயலல்லாமல் வேறல்ல.

இப்பொழுது இவ்வாலயத்தில் நைமித்திகமெனப்படும் உற்சவம் நடைபெறுதற்கு உற்சவமூர்த்திகளில்லை. எழுந்தருளும் மூர்த்திகளாகச் சத்திமாரோடு முத்துக்குமார சுவாமியையும் அமைத்தற்கு 250 ரூபாவிற்குக் குறையாமல் வேண்டுமென இங்குள்ள ஆசாரிமார் மதிப்பிடுகின்றனர். இதுவரையில் 55 ரூபா ஆசாரியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூர்த்திகளின் வேலையும் ஒருவாறு நிறைவேறியிருக்கின்றது. ஆதலினாலே, இலங்கையில் வசிக்கும் சைவாபிமானப் புண்ணியசீலர்கள் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவிசெய்தால் இம்மேலான கருமம் நிறைவேறும். இப்பத்திரிகையின் ஆசிரியர்பேருக்கு, புண்ணியசீலர்கள் பணத்தை அனுப்புவரேல், பின்னர் பொருளுதவியவருடைய நாமமும் பணத்தொகையும் இப்பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும். மூர்த்திகளும் விரைவில் நிறைவேற்றப்படும். பத்திரிகையாசிரியரின் பெயரை இப்பத்திரிகையின் நான்காம் பக்க இறுதியில் ஆங்கிலத்திற் கண்டு கொள்க.

"எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே".

## மார்கழி மாசம்.

நாளைக்கு மார்கழிமாசப் பிறப்பாகும். மனுடர்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாளாம். தேவர்களில் இம் மார்கழி மாசம் புலரிக்காலமாகும். சைவசமயிகளாயுள்ளவர் இந்த மார்கழிமாசத்திலே நாள்தோறும் வைகறையில் நித்திரைவிட்டெழுந்து நித்திய கடன்களை முடித்து விசேஷமாகப் பெண்பாலார் தத்தம் இல்லத்தைச் சுத்திசெய்து முன்றி

## செறம்பானிலுள்ள சுப்பிரமணியராலயம்.

சென்ற வியாழக்கிழமை (10-12-25) வெளிவந்த இந்துசாதனத்தில் இந்த ஆலய விஷயமாகச் சில கூறியிருந்தேம். சென்ற வாரம் வெளிவந்த "மலாய் மெயில்" என்னும் தோவோய்ராச்சியப்பகுதிப் பத்திரிகையைப் பார்க்கும்போது, செறம்பான் அதிகாரிகள் மேற்படி கோயிலை அகற்றிவிடும் நோக்கமாகச் சில செட்டிப்பிள்ளைகளையும் மற்றுஞ் சில சைவசமயத்தவர்களையும் விசாரணை செய்தபோது, அவர்கள் ஆலயத்தை இடிப்பதற்கு மாருக நின்றமையினால், மேற்படி அதிகாரிகள் சைவாலயத்தை ஒழித்து விளையாட்டு முன்றிலாக மாற்றும் நோக்கத்தை அறவே யொழித்துவிட்டனரென அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேம் சைவ நன்மக்கள் அவ்விஷயமாகக் கவலைகொள்ளாதொழிவாராக.

## கள்ளுத் தவறணைகள் மூன்று தொலைந்தன.

முகமாலையிலும், செம்பியன்பற்றிலும், கிளாலியிலும் உள்ள மூன்று கள்ளுத் தவறணைகளும் இந்த டிசெம்பர்மீ முறையே 10-ம், 11-ம், 12-ம் திகதிகளில் அவ்வப் பகுதியாரின் சம்மதம் பெற்று அகற்றப்படலாயின! இத்தவறணைகள் வேண்டாமெனச் சம்மதஞ் சொல்லுவோர் மிக்க விருப்பத்தோடும் ஆத்திரத்தோடும் காலதாமசமின்றி வந்து சம்மதஞ் சொன்னமையினால் சம்மதஞ் சொன்னோர் தொகை 60 விகிதத்திற்கு மேற்பட்டவுடன், காலை 10 மணி 11 மணிக்கிடையில் சம்மதஞ்சொல்லுதல் நிறுத்தப்பட்டு தவறணைகள் அகற்றப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது; பச்சிலைப்பள்ளியில் வசிக்கும் அபிமானிகளின் பெருந்தன்மை சாலவும் வியக்கற்பாலதாம். இங்குள்ள தவறணைகளையும் அபிமானிகள் இந்த முறை தவருது ஒழித்துவிடல் வேண்டும்.

## கப்பலில் நிகழ்ந்த கொலை.

எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

சென்றஅக்டோபர்மீ 24உ 'ஆர்ஷையர்' என்னும் புகைக்கப்பலிலே அயசொடி என்னும் ஒருவன் அக்கப்பலிற் பிரயாணஞ்செய்த ஒருவரைக் கொலை செய்த வழக்கு சென்ற புதன்கிழமை கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைசெய்யப்பட்டு எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

## கேம்பிறிஜ் சர்வகலாசங்கப் பரீட்சைகள்.

கேம்பிறிஜ் சர்வகலா சங்கத்தாரால் நடாத்தப்படும் ஸீனியர் ஜூனியர்ப்பரீட்சைகள் இலங்கையிலே, கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி, மட்டக்களப்பு ஆதியாமிடங்களைமத்தியஸ்தானங்களாகக்கொண்டு நடாத்தப்பட்டன. இவ்வருடத்லே ஸீனியர்ப்பரீட்சையிற்பிரவேசித்த சிறுவர்களின் தொகை 1433. சிறுமியர் 166. ஜூனியர்ப்பரீட்சையிற் பிரவேசித்த சிறுவரின்தொகை 983. சிறுமியரின் தொகை 164.

## கும்பாபிஷேகம்.

வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள வெள்ளாக்தெருப் பிள்ளையார்கோயிற் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் இந்தக் கார்த்திகைமீ உடு வியாழக்கிழமை யுதயத்தில் நிகழ்ந்தசுபமுகூர்த்தத்திலே மிகவும் சிறப்பாகவிதிப்படிநிறைவேறியது. அன்றுதொடக்கமாக விசேட அபிஷேகம் நடைபெற்றுவருகின்றது. மிகப் சிலமுற்றுக் கிடந்த இப்புராதன ஆலயத்தைப் புதுக்குவித்து விதிப்படி கும்பாபிஷேகமுஞ் செய்வித்து நித்திய நைமித்திகங்கள் நடைபெறச் செய்துவரும் அன்பர்கட்கெல்லாம் அங்குசபாசப்பிள்ளையார்திருவருள் கைகூடுவதாக.

## சட்ட நிருபண சபை.

இந்த டிசெம்பர்மீ 17உ வியாழக்கிழமை இரண்டரை மணியளவிலே ஷெ சபா மண்டபத்திற் சட்டநிருபணசபை கூடும். அப்பொழுது எமது புதிய தேசாதிபதியாகிய சேர் ஹியூஸ் கிளிவோட் அவர்கள் முதன்முறை அக்கிராசனம் வகிப்பர். தேசாதிபதியவர்கள் கூட்ட ஆரம்பத்திலே, காலஞ்சென்ற அலெக்சாண்டிரு ராணியாரின் தேகவியோகத்தையிட்டு இலங்கைவாசிகளின் அனுதாபசமாசாரங் கூறுவர். அதன்பின் மூன்று மணியளவில் வழமையான கூட்டம் நடைபெறும். அத்தருணம் ஷெ சபையின் உப அக்கிராசனராகிய சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் சபைத் தலைவராய் அமர்வர்.

## விவாகம்.

நீர்வேலியைச் சொந்தஸ்தானமாகவுள்ளவரும், கொழும்பு பகிரங்கவேலைப்பகுதித் தலைமை ஸ்தானத்தில் லிகிதராகவிருப்பவரும் ஸ்ரீ சி. தம்பையா அவர்களின் புத்திரரும் இந்துசாதன மானேஜராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ சி. கந்தையாபிள்ளையவர்களுக்கும் புகைரதப்பகுதியில் "ஸ்ரேசன்மாஸ்டர்" ஆகவிருக்கும் ஸ்ரீ சி. கதிர வேலு அவர்களுக்குப் புத்திரர்முறைபூண்டவருமாகிய ஸ்ரீ த. இரகுநாதனவர்களுக்கும், சுதுமலை ஸ்ரீ கார்த்திப்பிள்ளை அவர்களின் ஏக புத்திரியும் ஸ்ரீ கா. சோமசுந்தரம் ஸ்ரீ கா. பொன்னையா ஸ்ரீ கா. செல்லையா என்னுமிவர்களின் சகோதரியுமாகிய ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் சென்ற வியாழக்கிழமை இரவு மணமகள் கிருகத்திலே விவாகம் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் அட்ட ஐஸ்வரியங்களைப் பெற்றுப் பல்லாண்டு வாழும்வண்ணம் குஞ்சிதபாத நடராசப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் திருநாட் கொண்டாட்டம்.

திரிகோணமலை ஸ்ரீ ராமகிருஷ்ணசங்கச் சைவாங்கில வித்தியாசாலைக் கலாபிவிர்த்திச் சங்கத்தாரால், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்பெருமானின் குருபூசைத் திருநாட் கொண்டாட்டம் சென்ற திங்கட்கிழமை ஷெ ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பெற்றது. ஸ்ரீமத். சுவாமி விபுலாநந்தரவர்கள் சபாநாயகராயிருந்து கூட்டத்தை நடத்தினர்கள். ஸ்ரீமத். சுவாமிகளாலும், பிரமஸ்ரீ கி. சி. இராமஸ்வாமி ஐயர் பி. ஏ, எல். டி., திருவாளர் ஆ. விஞசித்தம்பி போஸ்ட்மாஸ்ரர், கோணேசுவர வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திருவாளர் அ. பரமசாமி, திருவாளர் மா. பிதாம்பரம்பிள்ளை என்பவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. இடையிடையே தேவார திருவாசகங்களும், நாவலர் இயற்றிய செய்யுட்களும், சமஸ்கிருத ஸ்தோத்திரங்களும் மாணாக்கரால் ஓதப்பெற்றன. கடி. த.

## மோட்டர்வண்டியினாலும் புகைரதத்தினாலும் இடறுண்டு இறந்தோர்.

1915-ம் வருடத் தொடக்கம் 19[illegible] வருடம் முடிய, மோட்டர்வண்டி புகைரதம் என்னுமிவற்றால் இடறுண்டு இறந்தோருடைய கணக்கை இலங்கைப் பதிவுகந்தோர்த் தலைவர் தமது அறிக்கைப்பத்திரத்தில் வெளியிட்டிருக்கின்றனர். இந்த இரதங்களால் இறப்பவர்களுடைய தொகை வருடந்தோறும் அதிகரித்துவருகிறதென்பதை அவ்வறிக்கை காட்டுகின்றது. அதன் விபரம்:—

| வருடம் | மோட்டாரதத்தினுல் இறந்தோர். | புகைரதத்தினுல் இறந்தோர். |
|---|---|---|
| 1915 | 16 | 26 |
| 1916 | 22 | 42 |
| 1917 | 24 | 31 |
| 1918 | 22 | 25 |
| 1919 | 20 | 32 |
| 1920 | 47 | 56 |
| 1921 | 36 | 47 |
| 1922 | 36 | 42 |
| 1923 | 48 | 56 |
| 1924 | 83 | 57 |

## கௌரவ ஸ்ரீ கோ. நடேசையர்.

இரண்டாவது இந்திய சனப்பிரதிநிதி.

சட்டநிருபண சபையின் இரண்டாம் இந்திய சனப் பிரதிநிதித் தெரிவு சென்ற வியாழக்கிழமை நடைபெற்றது. அந்த ஸ்தானத்தைப்பெற முற்பட்டுநின்ற இருவருள் ஸ்ரீ கோதண்டராம நடேசையரவர்களே ஜயமடைந்தனர். கௌரவ ஸ்ரீ நடேசையரவர்களுக்காக 3536 பேர் சம்மதங் கூறினர். மிஸ்ரர் எஸ். பி. சார்ல்ஸ் அவர்களுக்காக 2643 பேர் சம்மதங் கூறினர். ஆகவே ஸ்ரீ கோ. நடேசையரவர்கள் இந்திய சனப்பிரதிநிதியானர் என்ற சமாசாரம் சென்ற வெள்ளிக்கிழமை காலை பதினொன்றரைமணியளவில் வெளிப்படுத்தப்பட்டது. அந்த ஸ்தானத்தைப் பெறுவதற்கு முற்பட்டு அபஜயமடைந்த மிஸ்ரர். எஸ். பி. சார்ல்ஸ் அவர்கள் கௌரவ நடேசையரவர்களைச் சந்தித்து மனமகிழ்ச்சியுடன் அவருக்கு வாழ்த்துக் கூறினர். மிஸ்ரர் சார்ல்ஸ் அவர்களுடைய அரிய செய்கையிட்டு நாம் பெரிதும் மகிழ்கின்றேம். பிரதிநிதிகளாதற்கு முற்பட்டு அபஜயமடைவோர், இச்சந்தர்ப்பத்தில் மிஸ்ரர் சார்ல்ஸ் அவர்கள்நடந்துகொண்ட விசேடமுறையைச் சிறிதேசிந்தித்து அவரைப் பின்பற்றுவாரர்களாக.

## சாரதி எசமானனைச் சருவியமை

"நான் உன்னையே எதிர்பார்த்து நிற்கிறேன்"

காலியிலே மோட்டர்பஸ் வண்டிகளின் சொந்தக்காரராகிய எல்லப் பெறிமா என்னும் ஒருவர் தன்கீழ்ச் சாரதியம் செய்யும் ஜெட்றிக் அப்பு என்னும் ஒருவனை அவனது ஒழுங்கீனங் காரணமாகச் சென்ற திங்கட்கிழமை இரவு கண்டித்தனர். இதனால் அதிக ஆவேசங்கொண்ட ஜெட்றிக் அப்பு மறுநாட் காலை தன் எசமானனைச் சருவமுயன்று வழிபார்த்திருந்தான். எசமானன் தன்னுடைய பஸ்வண்டிகள் நிற்கும் ஸ்தானத்தை அடைந்தபோது ஜெட்றிக் அப்பு என்பவன் "நான் உன்னையே எதிர்பார்த்துநிற்கின்றேன்" எனக் கூறித் தன்னிடமுள்ள கட்டியினால் எசமானனை மும்முறை குற்றினன். கழுத்திற் படுகாயமுண்டாயது. பஸ் சொந்தக்காரர் காலி வைத்தியசாலையிலே ஆபத்தானநிலையிற் கிடக்கின்றனர்.

## இந்தியாவிலே புகைரத விபத்து.

பலர் மாண்டனர்.

சென்ற வியாழக்கிழமை இரவு இந்தியாவிலே மிகவும் பரிதாபமான ஒரு புகைரதவிபத்து நிகழ்ந்தது. பிரயாணிகளை யேற்றிச்சென்ற ஒரு புகைரதத் தொடர் மாயவரம் அறந்தாங்கி இருப்புப்பாதை மீது புதுக்கோட்டைக்கும் அபிராமிபட்டினத்துக்கும்இடையிலேசெல்லும்போது அத்தொடரிலுள்ள ஏழு "போகி"வண்டிகளும் ஐந்துசிறுவண்டிகளும் யந்திரவண்டியும் கவிழ்ந்தன. அநேகர் இறந்தனரெனச் சொல்லப்படுகின்றது. காயப்பட்டோருட் பதினேழுபேர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனர். அவர்களுள்ளும் ஐவர் ஆபத்தானநிலையிற் கிடக்கின்றனர். அதிக மழை காரணமாக உண்டான வெள்ளப் பிரவாகத்தினால் இருப்புப்பாதை நிலத்துட் புதைந்தமையே இவ்விபத்துக்குக் காரணம்.

## சவப்பெட்டிகளில் உயிருள்ள சீனர்கள்.

அந்நியர்கள் அமெரிக்காவுக்குள்ளே காலடி வைப்பதற்குச் சிரம மதிகம். அந்நியர்களைப் புகுத்துவது எளிதான காரியமல்ல. அமெரிக்க கவர்ண்மெண்டார் இந்த விஷயத்தில் [illegible] தனையோ நிர்ப்பந்தங்கள் உண்டுபண்ணி[illegible]ள். அவைகளுக்குள் சிக்காமல் [illegible] தனமாக அமெரிக்க ஐக்கிய மாகா[illegible] போய்ச் சேர்ந்துவிடவேண்டுமென்று சீனஜாதியார் சிலர் ஒன்றுசேர்ந்து சதியாலோசனை செய்தார்கள். சவப்பெட்டிகளை எவருந் திறந்து பார்க்கமாட்டார்கள், அவைகளுக்குள் படுக்கவைத்து ஆட்களைக் கொண்டுபோய்விடலாம் என்பது சிலரது நோக்கு. இதை நிறைவேற்றும்பொருட்டு அமெரிக்காவுக்குச் சென்ற கப்பலொன்றில் வரிசை வரிசையாகச் சவப்பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்குள் சீனர்களை ஆகாரத்துடன் சேர்த்து அடக்கம் செய்திருந்தனர்; இந்தத் தகவல் மெதுவாக அமெரிக்காவுக்குளெட்டிவிட்டது. அவர்கள் வந்து நீராவிக்கலத்தைச் சோதனை செய்து உள்ள அக்கிரமத்தைக் கண்டு பிடித்துவிட்டார்கள். கிழக்கு நாடுகளில் சதியாலோசனைக்காரர்கள் அமெரிக்காவுக்குச்செல்லும் கப்பற்காரர்களுக்கு லஞ்சம்கொடுத்துத் தமது குட்ரயுக்தியை நிறைவேற்றப் பிரயத்தனித்திருக்கவேண்டுமென்னும் அனுமானம் ஏற்படுகின்றது.

இந்துநேசன்.

## "பிக்னிக்" கொண்டாட்டம்.

ஒருவரை ஆறு விழுங்கியது.

சென்ற திங்கட்கிழமை வட்டப்பலவா என்னுமிடத்திலே சென்ற் அந்தோனிக் கல்லூரி மாணவர் சிலர் தமது ஆசிரியர் ஒருவருடன் விடுமுறைகாலக் கொண்டாட்டத்தின்பொருட்டு மகாவலிகங்கை ஆற்றில் நீராடச்சென்றுர்கள். எல்லோரும் ஆனந்தமாக நீராடினுர்கள். அவர்கள் அறியாதபிரகாரம் எட்வின் என்னும் மாணவன் நீரோட்டத்தில் அகப்பட்டு மாண்டான். நீராட்டம் முடிந்தபின்னரே எட்வின் என்பவனைக் காணவில்லையென்ற விஷயம் வெளியாயது. அவனது பிரேதம் வெளியாகவில்லை. மேல் கீழ் தென் ஊவா வடமத்திய மாகாணங்களிலே இவ்வித விபத்துக்கள் இடையிடையே நிகழ்கின்றன, சில சந்தர்ப்பங்களில் இருவர் மூவரும் மாண்டுபோகின்றனர். இவற்றைக் கண்டும் சிலகல்லூரி மாணவர் தமது விடுமுறைக் கொண்டாட்டத்தை ஆற்றிலேமுடித்துவிடமுயலுகின்றனர். இவ்வித சிவமோசத்துக்கு மாணவரை அழைத்துச் செல்லும் ஆசிரியரே உத்தரவாதியாவர். விடுமுறைக் கொண்டாட்டத்துக்கு ஆற்று நீரோட்டமன்றிப் பிற இடங்களை இந்த ஆசிரியர் வகுத்துக்கொள்ளாமை பற்றி வருந்துகின்றேம். இந்த ஆசிரியரும் இவர்போன்றுரும் தாதலப்பத்திரம் பெற்று மாணவர்களுக்கு அறிவை ஊட்டத்தக்க கல்வியைக் கற்பிப்பதைக்காட்டிலும் மாணவர்களுடைய உயிர் வீணே போகாவண்ணம் காப்பாற்றுவதே மிகச் சிறந்ததாகும்.

## மணப்பறை பிணப் பறையாய் மாறியது.

குடி வெறியால் நேர்ந்த கொலையாம்.

சென்ற வியாழக்கிழமையிரவு(10-12-25) சங்குவேலியிலுள்ள பறைச் சிறுமிக்கும் சிவியாதெருவிலுள்ள பறையனுக்கும் பெண்வீட்டிற்றுனே விவாகம் நடைபெற்றது. பெண்ணை மணமகன் வீட்டிற்கு உடனே அழைத்துச்செல்லும் விஷயத்தில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுப் பெருஞ் சண்டையுண்டாகி ஒரு பறையன் இன்னெருபறையனைக் கத்தியாற் குற்றிக் கொன்றுவிட்டானும். மதுபானம் அதிகப்பட்டமையே இக்கொலைக்குக் காரணமெனச் சொல்லப்படுகின்றது.

## மத்தியமாகாண சைவமகாசபை.

குரோதனவஹு கார்த்திகைமீ உகஉ (6—12—25) ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஏழுமணியளவில் கண்டித் தமிழக மண்டபத்திலே மத்தியமாகாண சைவ மகாசபையின் ஆதரவின்கீழ் ஓர் கூட்டம் நடாத்தப்பட்டது. அத்தருணம் நிருவாக சபை அங்கத்தவர்களுளொருவரும் இச்சபையைஸ்தாபித்தற்குத் தாயகருமாயிருந்த திருவாளர் சோ. சிவஞானசுந்தரம் அவர்கள் தலைமை வகித்திருந்தனர். கண்டிப் பிள்ளையார் கோயில் அர்ச்சகரும் இச்சபையின்கீழ்நடாத்தப்படும்சித்தாந்த நூற்பயிற்சிக்கழகம், திருக்குறட்பயிற்சிக் கழகம் முதலிய கழகங்களுக்கு ஆசிரியருமாகிய பிரமஸ்ரீ கு பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள், பிரதானமாய்ச் சித்தாந்தநூற் பயிற்சிக் கழகத்திற் சேர்ந்து பயில்பவர்களுக்கு உபயோகமாக "தத்துவ விளக்கம்"என்னும் விஷயத்தைப் பற்றி ஓர் சிறந்த உபந்நியாசஞ்செய்தனர், சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்மதத்துவம் என்னும் மூன்று பிரிவுகளடங்கிய முப்பத்தாறு தத்துவங்களைப்பற்றி யாவரும் உணர்ந்துகொள்ளும் வண்ணம் மிகவும் அரிய நடையில் விளக்கப்படுத்தி, இத்தத்துவங்களை ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் அனுபவத்திலே உணரல்வேண்டு மென்றும் கூறி முடித்தனர். சபைத்தலைவர் குறிப்புரை கூறியபின்னர், தேவாரபாராயணத்துடன் கூட்டம் எட்டரை மணியளவில் நிறைவெய்தியது.

## ஆறுமுகநாவலர் குருபூசை.

நிகழும் குரோதனஹு கார்த்திகைமீ 22உ (7-12-25) திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் கண்டித் தமிழக மண்டபத்தில் மத்தியமாகாண சைவமகாசபையின் ஆதரவின்கீழ் ஐந்தாங்குரவரென்று வழங்கப்பட்டுவருபவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது குருபூசைத்தினம் மிகவும் விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. சுப்பிரமணியப் பெருமானது திருவுருவப்படமும் நாவலரவர்களது திருவுருவப்படமும் பீடத்தில் எழுந்தருளப்பட்டு திரு. பொ. பாலசிங்கம் (வியாபாரந்தார்) அவர்களால் தூபதீபம் முதலியவைகளால் பூசை நிகழ்த்தப்பட்டு மாணிக்கவாசக சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட "போற்றித்திருவகவல்" என்னும் திருப்பாடல் வாசிக்கப்பட்டது. பின்பு இணைச் செயலாளர்களுள் ஒருவராகும் திரு. சி. முருகேசு அவர்களால், ஸ்ரீ. த. கைலாசபிள்ளையவர்களாலியற்றப்பட்ட சரித்திரத்திலிருந்து நாவலரைப்பற்றிய விசேட சம்பவங்களைப்பற்றியும், அவர்களாலியற்றப்பெற்ற அநேக அற்புதச்செயல்களைப்பற்றியும், எடுத்தாளப்பட்டு, அச் சரித்திரத்தினிறுதியின்கண்ணுள்ள சரமகவிகளும் வாசிக்கப்பட்டன. மேலும் சமணம், புத்தம் முதலிய சமயங்கள் தலையெடுக்க எழுந்தபோது எவ்வாறு நம் சமயகுரவர்கள் திருவவதாரஞ் செய்து நமது மெய்ச்சமயமாகிய சைவசமயத்தை நிலை நிறுத்தினரோ அதுபோல் கிறிஸ்தமதம் நம் தாய்நாடாகிய யாழ்ப்பாணத்தின்கண்ணே தலைகாட்ட எழுந்தபோது எம்பெருமான் அருளால் இந்நாவலர் அவர்கள் அவதரித்து சைவமதத்தை ஸ்தாபித்தனரென்றும், சென்ற ஆடிமீ இச்சபையின் ஆரம்பக்கூட்டத்திற்கு அருள்மிக்க சுவாமி விபுலானந்தரவர்கள் இவ்விடம் எழுந்தருளியிருந்தபோது இச்சபையினர் நாவலர் அவர்களையே பின்பற்றி நடத்தல் வேண்டுமென்று கூறிய வண்ணம், அப்பெரியாரை முன்மாதிரியாக வைத்து, அவர்கள் நம்மனோர் உய்யுமாறு அரிய பெரிய சொற்பொழிவாலும் சொற்சுவை பொருட்சுவைகளியும் பற்பல ஆராய்ச்சி நூல்களாலும் போதித்தவைகளைக் கொண்டு அவ்வாறு நடந்தொழுகுதல் எங்கள் மேற் பொறுத்தகடனுகுமென்றும், இச்சபையின் நோக்கங்களைச் செவ்வனே நடாத்தும் பொருட்டு அவர்களுடைய போதனையின்படியே இச்சபையைக்கொண்டு நடாத்தல் உசிதமாகுமென்றும், இப்பெரியார் சைவர்களாகிய யாவராலும் எப்போதும் சமயகுரவர்கள் சந்தானகுரவர்கள் முதலிய நாயன்மார்களோடொப்பப் போற்றிவழிபடற்குரியரென்றும் கூறினர் இடையிடையே இணைச்செயலாளர்களுள் ஒருவராகும் திரு. செ. சின்னத்தம்பி அவர்களால் தேவாரதிருவாசகம் முதலிய அருட்பாக்கள் ஓதப்பட்டன. சபையிலுள்ளவர்கள் இப்பெரியாருடைய அருஞ்செயல்களை நினைந்து அவரைமுன்னோராகப்பெற்ற நமது தவப்பயனை நினைந்து ஆனந்தித்து, முன்னே நிவேதிக்கப்பட்ட கற்கண்டு கடலை, பழம் முதலியன அருந்தியபின்னர், கூட்டம் 9 மணியளவில் முடிவெய்தியது.

## சைவ மங்கையர் சபை.

இம்மாதம் 21ந (6-12-25) ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணி தொடக்கம் 'சைவமங்கையர் சபை' வருடாந்தக் கொண்டாட்ட நிகழ்ச்சி ஸ்ரீராமநாத வித்தியாலயத்தில் நடைபெற்றது. அத்தருணத்தில் முதலாவதாகத் தேவாரபாராயணம், சபையின் சென்றவருட ஆவேதன வாசிப்பு, உத்தியோக மாற்றம், புது அங்கத்தினரைத் தெரிவுசெய்தல் முதலியன நிகழ்ந்தன. பின்னர், அங்கத்தவர்களாற் சேகரிக்கப்பட்ட சிற்றுண்டிகள், தையற்பொருள்கள், சித்திரவேலை செய்யப்பட்ட பொருள்களின் விற்பனவு நடந்தது. இவற்றிற் கிடையிடையே வித்தியாலய மாணவிகளாற் சங்கீதகானஞ் செய்யப்பட்டது. அதன்பின்னர் பிரபல வர்த்தகரும் வைத்தியருமாகிய ஸ்ரீ பொன்னுச்சாமிப்பிள்ளையவர்களின் புத்திரிகளிருவராலே "கோட்" வாத்தியம் என்னும் நூதன நரம்புக் கருவியும் வீணையும் மிக இனிமையாக வாசிக்கப்பட்டன. அதன்பின்னர் ஸ்ரீராமநாத வித்தியாலயத்து ஆசிரியருள் ஒருவராகிய பிரமஸ்ரீ. கணபதிஐயர் B. A. அவர்களால் வேய்ங்குழல் வாசிக்கப்பட்டது. பின்னர், கௌரவ சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள் "ஆன்மாவும் பரிவார தேவதைகளும்" என்னும் விஷயமாகச் சிறந்த உபந்நியாசஞ் செய்தார்கள்.

மாலை ஆறுமணியளவில் ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேஸ்வரருக்கும் நடராசப் பெருமானுக்கும் விசேஷ பூசை நடந்தது. அதன்பின்னர் மேற்படி வித்தியாலய மாணவிகளாலே ஸ்ரீ ராமசரித்திரத்தி னொருபாகமாகிய அயோத்தியாகாண்ட சரித்திர காலக்ஷேபம் நடத்தப்பட்டது. 9மணியளவில் "ஸ்ரீநடராஜர் மங்களத்துடன் சபை பூர்த்தியாயிற்று.

சென்ற ஒரு வருட காலமாகத் தமது தேக சிரமத்தையுங் காலக்கழிவையும் பொருட்படுத்தாது, சமயம், பாஷை முதலியவற்றின் வளர்ச்சி கருதிக் காரியதரிசியாகவிருந்து நன்மை புரிந்து இப்போது தனாதிகாரியாகக் கடமை பார்க்கும் ஸ்ரீமதி க. சொர்ணகாந்தி யம்மாளுக்கு இச்சபையார் என்றும் மறவாத நன்றியுள்ளவர்களாயிருப்பார்கள். காரியதரிசி,

## மார்கழிமாத விசேட தினங்கள்.

1ந (15-12-25) செவ்வாய், அமாவாசை விரதம்.
5ந (19-12-25) சனி, சதுர்த்தி விரதம்.
7ந (21 12 25) திங்கள், விநாயக சஷ்டி விரதம், திருவெம்பாவை பூஜாரம்பம். சிதம்பரம், காரைநகர்ச்சிவன் கோவில், திரிகோணமலைவிசாலாட்சி அம்மன் கோவில் உற்சவாரம்பம்.
9ந (23-12-25) புதன், வாயிலார் நாயனார் குருபூசை.
11ந (25-12-25) வெள்ளி, சுவர்க்கவாயில் ஏகாதசி.
12ந (26-12-25) சனி, கார்த்திகை விரதம்.
13ந (27-12-25) ஞாயிறு, பிரதோஷம்.
14ந (28-12-25) திங்கள், சேர்ப்போட்டப் பிரவேசம்.
15ந (29-12-25) செவ்வாய், சிதம்பரம், காரைநகர்ச் சிவன் கோவில் இரதோற்சவம், பூரணை விரதம்.
16ந (30-12-25) புதன், நடராசர் ஆருத்திராதரிசனம், சடைய நாயனார் குருபூசை.
22ந (5-1-26) செவ்வாய், இயற்பகை நாயனார் குருபூசை.
25ந (8-1-26) வெள்ளி, மானக்கஞ்சாற நாயனார் குருபூசை
27ந (10-1-26) ஞாயிறு, சேர்ப்போட்ட நிவிர்த்தி.
29ந (12-1-26) செவ்வாய், பிரதோஷம்.
30ந (13-1-26) புதன், அமாவாசை விரதம், மார்கழி தைமாச அமாவாசைத் திதி, சாக்கியநாயனார் குருபூசை.

## நூல்களைப்பற்றியகுறிப்பு.

### திருப்புகழ் விருத்தியுரை.

கலியுகத்தன்னிலே கண்கண்ட தெய்வமாகிய அறுமுகக் கடவுளின்மீது, அநுபூதிமானாகிய அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய பிரபந்தங்களான திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி யாதியாம் இவைகளே இக்காலத்தில் அடியவர்களாற் பக்தியோடும் பெரிதும் பாராயணஞ் செய்யப்படுகின்றன. காவடிச் சிந்து பாடிய சிறந்த வித்துவானாகிய அண்ணாமலைச் செட்டியாரும் "அருணகிரி நாவிற் பழக்கந் தரும் அந்தத் திருப்புகழ் முழக்கம்" எனத் திருப்புகழ்ப் பாராயணத்தை வியந்து கூறியுள்ளனர். "மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்—வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என்ற அருணகிரி வள்ளலார் உண்மைவாக்கின்படி,இப்பிரபந்தங்களை ஓதும் அடியார் அறுமுகக்கடவுள் திருவருட் செல்வத்திற்கு அருகராவரென்பது திண்ணம். பாராயணஞ் செய்யும் அடியவர் அவ்வத் திருப்பாக்களின் அர்த்தத்தையும் ஒருவாறு விளங்கிப் பத்திபண்ணும்படி, இக்காலத்து அறிஞர் சிலர் கந்தரலங்காரம் கந்தரநுபூதி என்னுந் தோத்திரப் பிரபந்தங்கட்குத் தத்தம் அறிவிற்கு எட்டியவரை உரைகள் எழுதியுள்ளனர். திருப்புகழினுள்ள சிற்சில பாகங்களுக்கு உரை முன்னரும்வெளிவந்துள்ளன. சென்னையைச்சார்ந்த மைலாப்பூர் அல்லயன்ஸ்கம்பெனியார் இத்திருப்புகழுக்கு உரை பெறுவித்து அச்சிட்டுவெளியிடவேண்டுமென்னும் நன்நோக்கம் பூண்டவராய், ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியபிள்ளை (M.A.) அவர்களையே உரையாசிரியராகக் கொண்டு திருப்புகழ் விருத்தியுரையைப் பாசம்பாசமாக மாசந்தோறும் சஞ்சிகையாக வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர். முதற்பாகத்தில், குமாரக் கடவுள் பாடிவீடுகள் ஆறனுள் முதல்லைத் தென்னைப்பதியாகிய சுவாமிமலையெனப்படும் திருவேரகத்திற்குரிய திருப்புகழ் களுள் 23 திருப்புகழ் விருத்தியுரையோடு வெளிவந்துள்ளன, உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாணசகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. நான்முகத்துள்ள வள்ளியம்மையார் தெய்வயானையம்மையார் சமேத சுப்பிரமணிய திருவுருவப் படமும் அடுத்த பக்கத்தில், சிவபெருமானுக்குக் குமாரக்கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படமும் திருவருள் விலாசத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்டமாத்திரத்தே உருகச்செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளன. உயர்ந்த காகிதப் பதிப்பின் கிரயம் வருடமொன்றுக்கு ரூபா 6. தனிச் சஞ்சிகை அணா 8. சாதாரண கிளேஸ் காகிதப் பதிப்பு வருடமொன்றிற்கு நாலேமுக்கால் ரூபா, தனிச்சஞ்சிகை அணா 4. பிரதிகள் மேற்படி கம்பனியாரிடம் பெறற்பாலன.

### அக்ஷயவருட வாக்கிய பஞ்சாங்கம்.

"இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்கம்" என வழங்கும் யாழ்ப்பாணம் சோதிட பரிபாலனை மடத்து அக்ஷயவருட வாக்கிய பஞ்சாங்கம் இரகுநாதையரவர்கள் தத்தபுத்திரர் பிரமஸ்ரீ சிவராமலிங்க ஐயரவர்களாலும், பௌத்திரர் பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சர ஐயராலும் நுட்பமாகக் கணித்து, சோதிடப்பிரகாச யந்திரசாலையில் அழகாக அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. இது 69-ம் வருடப் பதிப்பாகும். யாழ்ப்பாணத்திலே இத்துணை நீடித்தகாலத்திற்குத் தொடர்பாக வெளிவந்த வேறு எப்பஞ்சாங்கமுமில்லையாம். இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்கமே அக்காலத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள்போன்ற அறிஞர்களாற் கைக்கொள்ளப்பட்டதென்பர். சென்ற சில வருடங்களாக இப்பஞ்சாங்கம் பிரதியொன்றன் விலை சதம் 30 (5 அணா) ஆக விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வருடப் பஞ்சாங்கம் பழைபடி 25 சதம் (4 அணா) ஆக விதிக்கப்பட்டிருக்கிறது. விலை குறைக்கப்பட்டிருப்பினும் விஷயங்கள் முந்திய வருடப் பிரதிகளைக் காட்டிலுஞ் சில, விசேடமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அக்ஷய வருஷம் என்னவே நம்மவர் பெரிதும் அஞ்சுவர். அவ்வச்சத்திற்குக் காரணம் முந்திய அட்சய வருடத்தில் நேர்ந்த கஷ்டங்கள் போலும். வரும் பலனைப் பார்க்கும்போது குறித்த வருடம் அத்துணைக் கஷ்டமான பலனைத் தருவதாகச் சொல்லப்படவில்லை.

அட்சயவருட பலன் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

"மானேகேள் அக்ஷயத்தில் மாரியு[illegible]
தானே வளமுண்டு தாரணியில்—வசது[illegible]
சார்பொழியும் வேளாண்மை கா[illegible]
தோன்றுமே, சீர்பொழிய வோங்குந் திரு."

சகல பலாபலன்களையும் எண்ணி நிச்சயித்து, அட்சய வருடத்துக்குக் கண்ட பலன் ஏழுபங்கு கஷ்டமும் ஐந்துபங்கு சுபமுமாம்,

### தேசபந்து விஜயம்.

பாரதமாதாவின் ஈடேற்றத்தின் பொருட்டுத் தம்மையும் தமக்குரிய எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்து தமது புகழுடம்பை நிறுவிச் சில மாசங்கட்குமுன் பூதவுடம்பை நீத்த தேசபந்துவாகிய சித்தரஞ்சனதாசின் சிவிய சரித்திரமும் அவர்செய்துள்ள உபந்நியாசங்களுட் சிலவும் இலகுவான தமிழ்வசனநடையில் ஸ்ரீ M C.ஜயராம்நாயுடுஅவர்களால்எழுதப்பெற்று, "தேசபந்து விஜயம்" எனனும் பெயருடன் அச்சாகி வெளியந்திருக்கின்றது. இதற்குத் தமிழ்நாட்டுச் சுயராச்சியக் கட்சியின் தலைவராகிய ஸ்ரீ S ஸ்ரீநிவாச ஐயங்கார் (B A, B L) முகவுரை எழுதியுள்ளனர். தேசபந்து தாசரின் சீவிய சரித்திரத்தையும் அவர் மரணபரியந்தம் செய்துவந்த செயற்கருஞ்செயல்களையும் உள்ளபடியுணர்ந்து எவரேனும் தேசத் தொண்டு புரிதற்கு இந்நூல்சிறந்தசாதனமாகும் இதன்கண் அழகிய ஏழு பிரதிமைப் படங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பிரதிகள் அழகுற அச்சிடப்பட்டுள்ளன. விலை அணா 12 (சதம் 75). பிரதிகளைப்பெறவிரும்புவோர் சென்னை பெரியமேட், செந்தமிழ்ச் சிந்தாமணிப் புத்தகசாலையிற் பெறலாகும்.

### மாணவர் சங்க வெளியீடு.

யாழ்ப்பாண ஆசிரியர் கலாசாலை மாணவர் சங்கத்தால் வெளியிடப்பட்ட வெளியீடு வரப்பெற்றோம். இதன்கண் பல அரிய வியாசங்கள் மேற்படி கலாசாலை ஆசிரியராலும் மாணாக்கராலும் எழுதப்பட்டுள்ளன. மேற்படி கலாசாலை வரலாறு செய்யுணடையில் இயற்றப்பட்டுள்ளது. முத்திரா சக்கரமும் அதனைப்பற்றி எழுதிய விளக்கமும் மிக நுட்பமானவை.

### "தமிழர் போதினி."

சில வருடங்களாக மாசாந்தப் பத்திரிகையாக வெளிவந்த இப்பத்திரிகை இப்பொழுது வாரமொருமுறை வெளிவருகின்றது. இதன் ஆசிரியர் வண்ணார்பண்ணை ஸ்ரீ கு. விஜயரத்தினமவர்களாவர். இப்பத்திரிகையிற் பல அரிய விஷயங்கள்காணப்படுகின்றன பத்திரிகைகள் பல வெளிவருதல் நாட்டின் ஈடேற்றத்திற்கும் சீர்திருத்தத்திற்கும் அறிகுறியாகும். ஆனால்நம் நாட்டிலே இக்காலத்திற் பத்திரிகைகளை ஆதரிப்போர் மிகஅரிதாயிருக்கின்றனர். பத்திரிகை வருடாந்த சந்தா யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன எல்லைக்குள் ரூபா மூன்றும் வெளியூருக்கு ரூபா நாலரையாகவும் சிங்கப்பூர் முதலிய இடங்கட்கு ரூபா ஐந்தாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

எமக்கு அனுப்பிய புத்தகங்களையும் பத்திரிகையையும் உவந்தேற்றோம்.

### "மிலேச்ச இலங்கை"

இங்கிலாந்திற் பிரசுரமாகும் "ஈவினிங் நியூஸ்"என்ற பத்திரிகை"மிலேச்ச இலங்கை" என்ற தலையங்கத்தினடியிற் பின்வருமாறு எழுதுகிறது.

இலங்கைக்குச் சென்றவர்களுள் இலங்கையின் மலைப்பிரதேசங்களில் புஷ்பித்திருக்கும் புஷ்பங்களின் இயற்கை யலங்காரத்தையும், நகரங்களின் வனப்பையும், சீதோஷ்ண ஸ்திதியின் இன்பத்தையும், தென்னந் தோட்டங்களின் அழகையும் பற்றி வர்ணிக்காதவரில்லை. உண்மையான இலங்கை இன்னும் மிலேச்சத்தனத்திலிருந்து மீளவில்லையென்று குடியேற்ற நாட்டுக் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

அந்தத் தீவில் ஒரு வருடத்தில் 180 கொலைகள் நடந்திருக்கின்றன. 60 கொலையாளிகள் மரண தண்டனை யடைந்திருக்கின்றனர். அந்த அறிக்கையில் அவர்களுடைய குற்றங்கள் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன ஒரே ஒரு கொலைமாத்திரம் அடுத்தவரின் தூண்டுதலின் மேல் நடந்திருக்கிறது. மற்றவை ஆவேசத்தின்பேரில் நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு புருடனுக்கும் மனைவிக்கும் கொஞ்சம் மனஸ்தாபம் நேரிட்டாலும், மனைவி தன் குடும்பத்தவர்களுடன் வசிக்கும்படி போய் விட்டாலும், புருஷனுடன் இன்னொரு கிராமத்திற்கு வர மறுத்தாலும், புருஷனது வாய்க்கு ருசியாகச் சமையல் செய்யாவிடினும், துவேஷத்தினால் யாதொரு காரணமுமின்றிப் புருஷன் மனைவியைச் சந்தேகித்துக் கத்தியால் குற்றிக் கொன்று விடுகிறான். புருஷனுடன் பெண்சாதி வாழமறுத்தால் உடனே அவளைக் கொலைசெய்து விடுகிறான்.

புருடன் மனைவிக்குள் ஏற்படும் மனஸ்தாபங்களில் பெண்ணைச் சேர்ந்தவர்கள் தலையிட்டால் புருடன் அவர்களைக் கொலை செய்கிறான். 1923-ம் வருடத்தில் இரண்டு பெண்களுடன் வாழ்வதில் மனச் சோர்வடைந்து ஒருவன் இருவரையும் கொன்றுவிட்டான்.

அநேகமாக எல்லாக் கொலைகளிலும் கத்தியை உபயோகப்படுத்தினதாகத் தெரிகிறது.

புருடன் கூப்பிட்ட சத்தத்திற்கு மனைவி பதில் கொடுக்காவிட்டாலும அவளைக் கொலை செய்ய உடனே கத்தியை எடுத்துவிடுகிறான். கிராமங்களில் பூஸ்தியுள்ளவர்கள் இவ்வாறு செய்கிறதில்லை அன்றடித்து அன்று வாயிலிடும் இயல்புடைய சனங்களே இத்தகைய மிலேச்ச குணமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

கொலை செய்வதற்காகக் கத்தியை உபயோ[illegible]லாகாதென்ற ஆங்கிலேயருடைய சுபா[illegible] இலங்கையர்களுக்கு அமையவில்லை கிரா[illegible]ள்ளவனுக்கு ஆவேச முண்டானதும் [illegible]தியை எடுக்கிறான். கத்தி அவன் கோபத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு இயற்கையான ஆயுதமெனக் கருதுகிறான்.

அடிக்கடி இலங்கையிற் கொலை நடக்கிறது. ஆனால், அமெரிக்கக் கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணத்தில் நடைபெறும் கொலைகளைவிட இலங்கையிற் சொற்பமாகவே நடக்கின்றன ஐக்கிய மாகாணத்தில் 12,000-த்திற்கு ஒருவன் கொல்லப்படுகிறான்; இலங்கையில் 22,000-த்திற்கு ஒருவன் கொல்லப்படுகிறான்; இங்கிலாந்தில் 412,000-த்திற்கு ஒருவன் கொலைசெய்யப்படுகிறதாக மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுதேசமித்திரன்.


## விளம்பரம்.

3—11—25-ல் சொத். க. ஐயாத்துரை முன்பு 210-ம் இலக்கத்தில் வண் கிழக்கு வே. வல்லிபுரத்துக்குக் கொடுத்த தத்துவத்தை இன்று மேற்படி 239-ம் இலக்கத்தில் அழித்துவிட்டேன்.

வண் கிழக்கு, 11—12—25. } க. பொன்னையா. (Mis. 775.)

## பெயரைமாற்றுதல்.

காணவாய்தெற்கு வீரகத்தி கதிரனாகிய நான், இன்று தொடக்கமாக என் பெயரை வீரகத்தி கதிரித்தம்பியெனமாற்றி அப்படியே கைச்சாத்தும் இடுவேன் என்பதைச் சகலருக்குந் தெரிவிக்கிறேன்.

காணவாய்தெற்கு, 14-12-25. இப்படிக்கு, வீ கதிரித்தம்பி.
(Mis. 769,)

## ☞ "சேலம் பனியன்கள்."

உறுதியானது; விலை சரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது.
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
ருயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
(H. 40) S இந்தியா.

## நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலை.

மேற்கூறிய வித்தியாசாலையில் 1926-ம் ஆண்டு ஜனவரிமீ 1-ந் திகதி தொடக்கம தமிழ் மூன்றாந் தாரதலப் பத்திரம் பெற்ற ஓர் உதவி ஆசிரியர் தேவை. தேவாரம் பண்ணுடன் கற்பித்தலோடு ஆங்கிலமுந் தெரிந்தவராக இருத்தல்வேண்டும்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் சம்பள விபரத்தையும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

ச. சம்பந்தர்,
இந்துவாலிபர் சங்க காரியதரிசி.
(Mis. 772.) நாவலப்பிட்டி.

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில்யாழ்ப்பாணம் காட்டேசண்டுத்துரை அவர்களால் பின்னும் சொல்லப்படும் இடங்களில் விற்கப்படும்:—

(a) காங்கேசன்துறை மரக்காலையில் 1926 ஆண்டு தைமீ 11-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விற்கும் மரங்கள்:—
58 முதிரை மரங்கள்.

(b) யாழ்ப்பாணம் விறகுகாலையில் 1926-ம் ஆண்டு தைமீ 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு விற்கும் மரங்கள்:—
63 பாலை மரங்கள்

கண்டி, காட்டுக்கந்தோர் 8ந மார்கழிமீ 1925. R M. WHITE, வனபரிபாலனர். (G. 579)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு மு. மும. மு. சேவுகஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ அக்டோபர்மீ.

| நம். | இல. | ரூ. | பெயர் ஊர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 246 | 16 | 50 | இணுவில் கதிரேசு தம்பையா பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 255 | 18 | 30 | சண்டிருப்பாய் ஜியோ சாமுவேலு பொன் திருகில்லாத பட்டணக்காப்புச்சோடி 1 |
| 276 | 19 | 120 | திருநெல்வேலி விஸ்வர் துரையப்பா பொன் பட்டணக்காப்புச் சோடி 2 |
| 287 | 21 | 60 | வேலணை வைத்திலிங்கம் முத்துக்குமாரு பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |
| 297 | 22 | 13 | சோனகதெரு சுலுத்தான்மெய்தீன் வாவாமெய்தீன பொன் பின்கோர்க்கி அல்கத்து |
| | | | நவம்பர்மீ. |
| 352 | 2 | 125 | வண்மேற்கு முருகேசு சின்னத்தம்பி பொன் சங்கிலிக்கொடி 1 |
| 354 | 3 | 45 | கோண்டாவில் வேலுப்பிள்ளை கந்தையா பொன் சரட்டுக்கொடி 1 |
| 367 | 5 | 70 | வேலணைகிழக்கு கணபதிப்பிள்ளை காசமலி பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 381 | 7 | 40 | ஒட்டுமடம் சின்னவன் கந்தன் பொன் கப்பிப்பூராணட்டியல் 1 |
| 396 | 8 | 35 | வண்கிழக்கு ஆறுமுகம் சடையர் பொன் தலைச்சோடிப்பில் சேர்ந்த உருப்படி 3 |
| 402 | 9 | 30 | வண்மேற்கு சூரியமூர்த்தி கார்த்திகேசு பொன் திருகில்லாத கம்பிப்பூராணட்டியல் 1 |
| 405 | 9 | 45 | திருநெல்வேலி நமசிவாயம் நடராஜா பொன் முகப்புடன் கைச்சங்கிலி 1 |
| 410 | 10 | 16 | பெருமாள்கோவிலடி கதிர்காமச்செட்டி பெரியதம்பிபொன்இமிட்டோடுசோடி1 |
| 418 | 11 | 70 | சோனகதெரு மீஸ்கின் மெய்தீனவண்டு பொன் கயத்துத்தாலி 1 |
| 431 | 12 | 12 | எச்சமட்டு மாட்டீன் வீரசிங்கம் பொன அச்சாக்கூடு 1 பொன் கட்டி 1 |
| 452 | 14 | 75 | தாவடி வேலாயுதம் பொன்னையா பொன் பட்டணக்காப்புச் சோடி 2 |
| 460 | 15 | 50 | கோப்பாய்தெற்கு பெரியதம்பி கணபதிப்பிள்ளை பொன் இமிட் பதக்கத்துடன் கப்பிப்பூராணட்டியல் 1 |
| 465 | 16 | 50 | கந்தர்மடம் வல்லிபுரம் பொன்னையா பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 494 | 20 | 40 | சிவியாதெரு சரவணமுத்து கதிரவேலு பொன் சரட்டட்டியல் 1 |
| 510 | 22 | 40 | வண்கிழக்கு கார்த்திகேசுச்செட்டியார் துரையப்பா பொன் கவுத்தோர் 1 கொடி முகப்பு 1 |
| 528 | 23 | 32 | சிவியாதெரு முருகேசு அருணசலம் பொன் பட்டணக்காப்பு 1 |
| 536 | 24 | 45 | கல்வியங்காடு வைத்திலிங்கம் தம்பையா பொன் திருகில்லாத கம்பிப்பூராணட்டியல் 1 |
| 553 | 26 | 18 | கொக்குவில்மேற்கு நமசிவாயம் சிவப்பிரகாசம் பொன் தட்டுக்காப்புச்சோடி1 |
| 568 | 27 | 25 | சிவியாதெரு சுப்பிரமணியம் சுப்பையா பொன் பட்டணக்காப்பு 1 |
| 570 | 28 | 50 | சாவகச்சேரி கந்தையா செல்லையா பொன் கைச்சங்கிலி 1, இமிட் சிகப்புக்கல் மோதிரம் 1 |
| 581 | 29 | 15 | வண்கிழக்கு வைத்திலிங்கம் திருஞானபிள்ளை பொன் அச்சாக்கூடு 1 |

விற்பனவு:— குரோதன ஆண்டு மார்கழிமீ 9ந (23—12—25) புதன்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டகடை பிறவேசலாக மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis. 770.)

அரு செல்லையா உடையார், வெந்திஸ்மேஸ்தர்.

விற் கோலமிட்டுச் சாணத்தினால் மார்கழிப் பிள்ளையார் அமைத்துவைத்துப் பூக்களால் அப்பிள்ளையாரை அலங்கரித்து அவரை வணங்கிக்கொண்டு தாந் தாஞ் செய்யவேண்டிய ஏனைய கருமங்களைச் செய்தல்வேண்டும். ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமியராகிய எல்லாரும் விடியற்காலத்தில் ஆசாரசீலராய்த் தத்தங் குல தெய்வங்கள் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயங்கட்குச் சென்று கடவுளை வழிபட்டுக்கொண்டு அதன்பின் தங்கள் தங்கள் கருமங்களைச் செய்தல் வேண்டும். இவ்வருடத்தில் மார்கழிமாசம் ௧-ந் தேதி திங்கட்கிழமை திருவெம்பாவைப் பூசை ஆரம்பமாகும். ௯-ந் தேதி புதன்கிழமை ஆருத்திராதரிசனம் நிகழும். இப்பத்துத் தினங்களிலும் விடியற் காலத்திலே சைவசமயிகள் விசேஷ ஆலயவழிபாடு திருவெம்பாவைப் பாராயணம் திருவாதவூரடிகள் புராணபடனம் முதலியவற்றைச்செய்தல்வேண்டும். அன்பர்கள் நவநாகரிகத்தைப் பின்பற்றி, இச் சற்கருமங்களை அலட்சியஞ்செய்து வீணே இடர்ப்படவொண்ணாது.

## சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

அந்திய கால மொருவனுக் கணுகி
ஆக்கையை விட்டு ஆன்மா நீங்கிடு
காலம் வரையிற் கலங்கா மனத்தோடு
உத்தம மருந்தை யுதவிட வேண்டும்!
அறிவிலாப் புதல்வ ராயினு மவரைத்
துட்டரோ டிணங்கிக் 'கட்டாக் காலிபோல்'
விளைட் கழிக்க விடாமல் வித்தியா
சாலைக் கனுப்பித் தண்டனை செய்து
பல்கலை கலையும் படிப்பித்தல் வேண்டும்!
பூசைகள் புரியப் பொருளிலா விட்டாற்
பச்சிலை யாவ திட்டுப் பரமனை
மாலைகா லைகளில் வணங்குதல் வேண்டும்!
உடம்பின் னோய்வந் துற்றபோ தன்றி
ஏனைய போதில் நாளுஞ் செய்தே
அறுசுவை யுண்டி யருந்திடல் வேண்டும்!
கடமுனி யனைய கல்விமா னெயினுங்
காயமுள் ளளவுங் கற்றிட வேண்டும்!
பிராணன் பிரியினும் பொய்பே சாமற்
சத்தியந் தனையே சாற்றுதல் வேண்டும்!
நல்தர வாலே நலியுமே ழைகளின்
வேறுக்கையை விரும்பா திருந்திட வேண்டும்!
மாரன் கணைகள் மருமத் துறினும்
ஏதிலான் மனைபுகா திருந்திட வேண்டும்!
சிநேகித னெதுந் தீங்கு விளைத்தான்
மனதில் வையாது மன்னித்தல் வேண்டும்!
மார்க்கண் டருக்கு மரண மகற்றிய
பஞ்சாட் சரத்தைப் பக்தியோ டென்றுஞ்
சிந்தையி லுன்னிச் செபித்திடல் வேண்டும்!
வறிஞரா னோமென் றுடல் வளர்த்துப்
பூமிப் பொறையா யிருந்துபோன் றது
இல்லை யென்றுவந் திரந்தவர் தமக்கு
ஏதுங் கூடிய தீந்திட வேண்டும்!
பஞ்சபா தகங்கள் முதலிய பலவித
கோதிலா ரோடு கூடுதல் வேண்டும்?
உள்ளன் பில்லா ரொடுசெய் நட்பை
விரும்பா தன்றே விட்டிடல் வேண்டும்!
இருவர் தமக்கு நீதி யியம்பிடில்
"எள்ளுக் காய்பிளந் திட்டது போலப்"
பார்தம ரென்று பகுத்துண ராமல்
நடுநிலை யோடு நவின்றிட வேண்டும்!
எவரிட மாவது கடன்பட் டிருந்தால்
அடிக்கடி வந்தவர் அலக்கழி யாமற்
கொண்டுபோய்விட்டிக் கொடுத்திடவேண்டும்!
எவர்க ளிடத்துங் கடுமொழி யின்றி
மகிழ்வோ டின்சொல் வசனிக்க வேண்டும்!
வம்பர் வெறியர் மடையரைக் கண்டாற்
செய்மையின் மறைந்து சென்றிட வேண்டும்!
தந்தைதா யாசான் றமையன் வந்திடில்
ஆசனத் தெழுந்து நின்றுகொண் டவர்க்கு
விருப்பமோ பேசா ரஞ்செய வேண்டும்!
உலப்பிலா நூல்பல கற்கினு முலக
அனுபவம் நன்று யறிந்திட வேண்டும்!
நல்லவன் போல நயமொழி கூறி
அனுப்பிப் பொருளை அபகரிக் கின்ற
திருடர்செய் சூதைத் தெரிந்திட வேண்டும்!
கணிகையர் தங்கள் கண்வலை தன்னிற்
சிக்கி யுழலா திருந்திட வேண்டும்!
எத்துணை யின்ன லெய்தினுந் தனது
மானங் கெடாது வாழ்ந்திட வேண்டும்!
ஆருயிர் நீங்கினு மொருவனுக் களித்த
பேச்சுமா றுமற் பேணுதல் வேண்டும்!
உற்ற சமையத் தொருவர்செய் யுதவியை
நினைந்தவ ரோடு நேசித்தல் வேண்டும்.

## மதுபான நீக்கத்தை எதிர்ப்பவர்கட்கு ஓர் மனு.

திருவுங் கல்வியுஞ் சிறந்து விளங்கும்
யாழ்ப்பா ணத்தி லிருந்துவாழ் கின்ற
நண்பீர் நமக்கு நவின்றிடக் கேண்மின்!
பூதல மீது"புல லுருவியைப் போல்"
மனிதரை யற்ப வயசின் மரலிதன் -
ஊருக் கேக உதவிசெய் கின்ற
தீதுள குடிவகைத் தீஞ்சுக லனைத்தையுந்
தேசப் பிரஷ்டஞ் செய்திட நினைந்துச்
சென்றவா ண்டதனில் யாவருஞ் சேர்ந்து
செய்த முயற்சிக ளனைத்துஞ் சிலபேர்
அக்குடி வகையை விடமுடி யாத
தன்னல விருப்பத் தாலுந் தலைவர்கள்
ஒருவரோ டொருவர் ஒற்றுமை யின்றிச்
சம்மதஞ் சொல்லாத் தன்மையி னாலுஞ்
செயமடை யாது செய்த தொழிலெலாம்
ஆற்றிற் கரைத்த புளியாய விட்டதே!
நிகழும் வருஷம் அதைதனை வேற்றி
அகிலத் தவர்க்குப் பெருவாழ் வளிக்க
மேதா வியர்கள் வெளிப்பட்டு நிற்கிறர்
இவ்வரு ஷத்தினு மிவர்க்குமா றக
அன்பர்கள் சிலபேர் நிற்பதை யறிந்து
போதுவே மனது புண்படு கின்றதே!
தங்கள் சுகந்தை விரும்பித் தாணியோர்க்
கிடுக்கண் செய்வது பெரியோர்க் கியல்போ?
இந்நாள் காறும் நற்பெய ரெடுத்துப்
பின்ன ரதனைக் கெடுத்தல் பெருமையோ?
குடிவகை நீக்க விடோமெனக் கூறிநும்
மைந்தர்கள் வாயின் மண்போட லாமோ?
ஆசையா லிறைச்சி யருந்தினோ ரெலும்பைக்
கழுத்தணி யாகக் கட்டுவா ருண்டோ?
அளவில்லை யென்று செருப்பினுக் காகக்
காலைக் குறைப்பது கற்றோர்க் கழகோ?
மதுச்சா ராயத் துத்தகை வாங்கி
இலாப மெடுப்போ ரியம்பிடக் கேண்மின்!
பாவ வழியி லீட்டிய பணமது
சந்ததி தனையுந் தடிந்திடு மன்றோ?
அக்கா லத்தின் மதுக்குத் தகைகளை
வாங்கிய செல்வரின் வம்மிச மழிந்து
கெட்டுப் போனதைக் கேட்டி லீர் கொல்லோ?
ஆதலா லேவரு மைக்கியப் பட்டு
உட்கல கங்க ளனைத்தையு மொழித்து
எக்குடி வகையுமெம் மூரிலி லாமல்
அகற்றியோ ரீன்று மகமகிழ் வோடு
மனைவி மக்கள் ஞாதியார் வாழ்க்கைச்
சீரெலாம் பெற்றுச் சிறந்து வாழ் குதிரே.

### விருத்தம்.

போாயந்தைத்தழுவுவிக்கும்பிழைகளியற்றும்
பிதற்றுவிக்கும்
ஆராயந்தையழித்தொழிக்குமறிவைக்கெடுக்த
மசப்பியஞ்சேர் [தும்
பூராயச்சொற்பேசுவிக்கும்புகழைத்தொலைக்
போல்லாக்கட்
சாராயத்தின்தவறுனைகள்நீக்கவாருஞ்
சகத்திரே!

## அர்ச்சுனன் சபத பாடபேத ஆராய்ச்சி விளக்கம்.

புரட்டாதித் திங்கள் "ஆனந்த போதினி" 115-ம் பக்கத்தில் திருவாளர் க சின்னையா நாடார் (கடலாடி) விடுத்த வினாவையும் அதற்குப் பத்திராதிபர் எழுதிய குறிப்பையும், கார்த்திகைத்திங்கள் ஆனந்தபோதினி 198-ம் பக்கத்தில் தொடங்கி திருவாளர் தொ. மு. பாஸ்கரன் (சித்திராலயம்) ஏந்த விடையையும் பத்திராதிபர் எழுதிய குறிப்பையும் கண்ணுற்ற நமக்கு சில ஆசங்கைகள் நிகழ்தலின் பாடபேத ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேம்.

வில்லிபாரதம் துரோணபருவம் 184-ம் செய்யுள் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு சுத்தபாடமென்பதே எமது தேற்றம்.

### நியாயம்.

மட்டக்களப்பு, காரைதீவு கலைமகள் கழக வாசிகசாலை ஏட்டுப்பிரதியில் "மனைவியுயிர் மாய வுடன் மகன் மனைவி கையால் தினையளவு மோர்பொழுது சீவித்தவனுவேன்" என்றிருக்கின்றது. இவ்வேடு எழுதப்பட்ட காலம் 1867-ம் ஆண்டு தை மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமையாகும். மட்டக்களப்புக் கல்முனை Y. M. H. A. (இந்து வாலிபர் சங்க) ஏட்டுப்பிரதியில் "மனைவியுயிர்வீய நன்மகன்மனைவி கையால் தினையளவுமோர்பொழுது சீவித்தவனுவேன்" என்றிருக்கின்றது. இது எழுதி முடித்த காலம் 1829-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமையாகும். மட்டக்களப்பு புளியந்தீவு "விவேகானந்தசபை"யாரின் ஏட்டுப்பிரதியில் "மனைவியுயிர்போன பின் மகன்மனைவி கையால் தினையளவுமோர் பொழுது சீவித்தவனுவேன்" என்றிருக்கின்றது. இது எழுதி முடித்த காலம் 1829-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதி செவ்வாய்க்கிழமையாகும். மட்டக்களப்பு, புளியந்தீவு "விவேகானந்த சபையாரின் ஏட்டுப்பிரதியில்" மனைவியுயிர் போனபின் மகன் மனைவி கையால் தினையளவு மோர் பொழுது சீவித்தனுவேன்." என்றிருக்கின்றது. இது எழுதி முடித்த காலம் 1843-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19-ந் திகதியாகும். இவற்றிற்கெல்லாம் முந்தின காலத்திலெழுதப்பட்ட கமது ஏட்டுப்பிரதியொன்றில் "குனிசிலையினம் பிறுயிர் கோறல் புரிவேனேல், மனைவியுயிர் மாழநன் மகன்மனைவிகையால் தினையளவு மோர் பொழுது சீவித்தவனுவேன்" என்றிருக்கின்றது இன்னுமனேக இடங்களில் ஏட்டுப்பிரதிகள் ஆராயும்படி கடிதம் விடுத்துள்ளோம். பதில் வந்தில. காமாராய்ந்த சில ஏட்டுப்பிரதிகள் ஸ்ரீலஸ்ரீ நாவலப்பெருமான் ஜெகமாகிரா ஐந்து வருடங்களுக்குள் எழுதப்பட்டனவாகும் ஆகலின் தவறவரிடத்தன இவ்வேட்டுப்பிரதிகளை காமாராய்ந்தமையை மேற்படின் பிரம்மஸ்ரீ கவிக்கிருஷ்ணபாரதியவர்களையாவது, இலங்கை இந்திய விஜய ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்களையாவது அனுப்பி ஆராய்ந்து தெளிக.

மதுரைத்தமிழ்ச் சங்கப் பதிப்பை ஆராய்வாம். "மனைவியயலான் மருவல்கண்டுமவன் கையால் தினையளவுமோர்பொழுதுசீவித்தவனுவேன்" என்ற சபதத்தை க்ஷத்திரிய வீரனுன அர்ச்சுனன் ஒருபோதுஞ் சொல்லமாட்டானென்பதற்குப் பிரபல நியாயங்காட்டுதும். பாண்டுமகாராசா உயிரோடிருக்குங் காலத்துனே குந்திதேவியாரைவள், அறக்கடவுள், பவனன், தேவேந்திரன் என்னுமிவர்களைக் கூடி புத்திரோற்பத்தியுண்டாக்கிய காலத்து அன்னவர் மனைவிகையால் அசனமுண்டாரென்பதும், திரௌபதியார் அர்ச்சுனனுதிந்தாரிடத்தும் மனைவியாயிருக்க அறிந்தவன், வனவாசம் அஞ்ஞாதவாசம் முதலிய காலங்களில், வரோபித்து அசனம்பொருந்தினனென்பதும் ஐந்தாம் வேதத்தெக்கிற்கிலெடுங்களிற்காணப்படுதலால் தனுவிலிருலைச் சா தாராச்சொல்லானென்பது விவேகிகளாகிய யாவரும் யூகித்துணரற்பாற்று.

பாண்டுமகாராசா அவர்க்காளடைந்தாரென்றும் அர்ச்சுனன் எவருந்தமடைந்தானென்றும் பிரதிஞ்ஞைகளிருத்தலின் சங்கத்தார் பதிப்பின் "சாத்தியம்" சவ்வியபிசாரமாகும்.

மேற்படியார் பதிப்பில் நமக்கு மோர்சந்தேகமுளது அது "மனைவியயலான்மருவல்கண்டு" என்ற பதங்களுக்குப்பொருள் கூறுமிடத்து மனைவியை அயலான் மருவலென்று? மனைவி அயலானை மருவலென்றுகொள்வது.

வினையிலெனமகன்றனுடல்வேறு செய்வித்தோனே, குனிசிலையினையுயிர்கோறல்புரியேனேல, மனைவியயலான்மருவல்கண்டுமவன்கையால் தினையளவுமோர்பொழுது சீவித்தவனுவேன், என்றசெய்யுளில், பவிசேலாதுறைப்புச்சிறப்பின்மையும் நாவலர் பதிப்பில் "மனைவியுயிர் வீய நன்மகன் மனைவிகையால் என்ற பாடத்துப் பாவுக்குரிய உறுப்புக்கள் சிறந்தொளிர்வதும் பாவாணர் கவனிப்பதொன்றாகும்.

இங்ஙனம்,
ம. பொ. வைத்தியலிங்கதேசிகன்,
கலைமகள்கழக அக்கிராசனுதிபதி.

காரைதீவு,
9-12-25

## கணவனும் மனைவியும்.

("ஓர் மனையாள்" எழுதியுதவியது.)

கணவனும் மனைவியுமாகிய இருவரும் கலியாணப்பந்தரில் ஓமாக்கினி முன்பாக முதலாவது தேவர்கள் சாட்சியாகவும் குருசாட்சியாகவும் வேதப் பிராமணர் சாட்சியாகவும் சபையோர் சாட்சியாகவும் ஒவ்வொருவரும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் துக்கத்திலும் மரணம்வந்து பிரிக்கும்வரையும் ஒருவரை ஒருவர் ஆதரித்துக் கனப்படுத்தி உண்மையான உள்ளன்போடு இருப்போமென்று வாக்குப் பண்ணியுள்ளனரல்லவா? அன்றைக்குமாத்திரமென்று நினைத்துவிடாதீர்கள். புருஷன் மனைவி இருவரும் முற்கூறிய தேவவாக்கை நிறைவேற்ற எக்காலத்தும் ஆயத்தமாகவிருக்க வேண்டும், இதிலிருந்து அணுவேனும் பிசகி நடந்தால், தங்களுக்கல்ல கடவுளுக்கே துரோகம் செய்கிறோமென்று நினைத்துக் கொள்ளல்வேண்டும். மனைவிக்கு வரும் இன்ப துன்பங்களைப் புருஷனும் புருஷனுக்கு வருவதை மனைவியுமாகப் பங்குபற்றிக் கொள்ளல் வேண்டும் பூவும் மணமும்போலவும் நகமும் தசையும்போலவும் உயிரும் உடம்பும் போலவும் இருவர் மனதும் ஒருமித்து இருத்தல் வேண்டும். ஆனல் இப்படியான நிலைமையில் எந்தக் குடும்பத்தில் இருவரும் இருக்கிறார் [illegible]ளோ அந்தக் குடும்பம இம்மையிலும் மறு[illegible]யிலும் ஈஸ்வரகடாக்ஷம் பெற்று ஓங்கு[illegible]து திண்ணம். என்ன துன்பம் வந்தா[illegible]ங்கள் பரஸ்பர அன்புக்குக் குறைவு [illegible]மல் காப்பாற்றுங்கள். புருஷன் தன்[illegible]டைய ஏகபத்தினியின் மேலே வைத்திருக்கும் அளவற்ற அன்பும் மனைவி தன் ஏகபத்தாவின் மேல் வைத்திருக்கும் அளவற்ற அன்பும் ஒருவரை ஒருவர் முக்கியமாக எண்ணும் பெருந்தன்மையும் இருக்குமாயின் எவ்விதமான இடர்வந்தாலும் அதைப் பெரிதாய் நினைக்கமாட்டார்கள். இருவரும் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்த பின் ஒவ்வொருவர்மேல் இருக்கும் சிறு குற்றங்களை ஒவ்வொருவரும் சொல்லித் திருத்திக்கொள்ளலாம். மௌனமாய் இருந்து ஒருவரை ஒருவர் விசனப்படுத்தக்கூடாது இப்படிச் செய்வதினால் ஐக்கிய பங்கம் ஏற்படக்கூடும் சில புருஷர்கள் தங்கள் மனைவியரை ஒன்றுந் தெரியாத மிருகங்களுக்கு ஒப்பிடுகின்றார்கள். கற்றறிந்தோரும் தங்கள் மனைவியரை இவ்விதமாய் நடத்துவது வெட்கப்படத்தக்க விஷயம் ஒரு பெண்ணானவள் தன்னுடைய தாய் தந்தை சகோதரர் ஆகிய எல்லோரையும் வெறுத்துத் தன்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும், தனது அருமை நாயகனுக்கு அர்ப்பணஞ்செய்து அவனையே நம்பிப்போகின்றாள். புருஷனுமப்படியே சத்திய வாக்கோடு ஏற்றுக்கொள்ளுகிறார். பின்னுல் ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்ற பழமொழிப்படி நடப்பதும் உண்டு அறிவிற் குறைந்த பேதமைப் பெண்களும் சிலர் தம் கணவரோடு எதிர்த்துச் சண்டை செய்யும் வழக்கமும் உண்டு. இவ்வாறுன மனைவியரை வைத்து இல்லறம் நடாத்துவதிலும் பார்க்க,

"பத்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானல்
எத்தாலுங்கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாருக விருப்பளேயாமாயிற்
கூறாமற் சந்நியாசங்கொள்."

என்றபடி சன்னியாசங்கொள்ளல் நன்றும். ஆனுல் இப்படி நடப்பவர்கள் தங்களுக்கல்ல இருவரையும் இணைத்த ஈஸ்வரனையே நிந்தை பண்ணுகிறோமென்று கருதல்வேண்டும்.

தன் நாயகன் எவ்விதமான பொல்லாத கொடுநோய் உள்ளவனுயினும், அதனை ஒரு பொருட்படுத்தாது அவன் அண்டையில் இருந்து உதவிசெய்கிறபாக்கியசாலியே உத்தமமான மனைவி. அவளே பதிவிரதை. ஆனுல் இக்காலத்திலுள்ள கற்றறிந்த பெண்மணிகள் தங்கள் நாயகருண்டபாத்திரத்தில் உள்ள சேஷத்தை உண்ணும் வழக்கத்தை ஒழித்துவிட்டார்கள், அதுவுமல்லாமல் அந்தப் பாத்திரத்தைத் தொடவும் அருவருக்கிறார்கள். இது மேலைத்தேச நாகரீகமன்றோ?

"தக்கிற்கடங்காமுலையாளக்கணவனுண்ட
மிச்சிற்புறத்துவிரல்வீழவும்வீழ்தன்பிஞ்சிக்
குச்சித்தலின்றிநாருந்தாள்" எனவும்,

"அன்பன்நெறிகவலதிபாடுகண்டார்வமெய்திர், அன்பம்பயக்கபிணியாலழிதோற்றமாற்றித், தன்பங்காயிசன்நிறைகல்கமுன்காபம யாங்கும், வன்பன்தனர்மூக்கின் மாதவடிவு கொண்டான்."

எனவும் வரும் பாரதச்செய்யுள்களை இவர்கள் நோக்கவேண்டும்; இக்காலத்துப்பெண்மணிகள் இந்த அமிர்த வசனங்களை வாசித்ததியார்போலும். பெரும்பாலும் யேலைத்தேசத்தாரின் உடை நடைபாவனைகளைப் பின்பற்றுகிறார்களேயன்றி நம்முதாட்டியாரின் செயல்களைக்கனவிலும் நினைக்கிறார்களில்லை. இப்போது வெள்ளைச் சரஸ்வதிகளைப் பின்பற்றுவதையே முக்கியமாய் எண்ணிவிட்டார்கள். தை குறுக்குவிலும் ஐக்கியபுருஷரோடு ஐக்கியமாய்ச்சம்பாஷிப்பதிலும் வருமசேடுகளோ அனந்தம், எத்தனையோ குடும்பங்கள் குலைந்துவிட்டன இதனுல் நீதிஸ்தலத்துக்கும் வருடக்கணக்காய் இழுபட்டுப் பல அவமரியாதைப்படுகிறார்கள். அவர்களைப்பின்பற்றுவதனுல் அடையும் பலாபலன் இதுவே. இப்படிப்பட்ட மனைவியர் உலகத்திலிருந்து உலகத்தைப் பாழாக்கும் ஆண்மக்களைப்போல நாங்களும் இருந்தாலென்னவென்று பெண்மக்கள் கர்வங்கொள்ளுதல் பெரும் மடமையாகும். நாயகனுடைய உள் அன்பு என்னும் பாக்கியத்தைப்பெருத பதிவிரதை வேறுசந்தோஷங்களை ஒரு துரும்பாய் நினையாள் அவைகளெல்லாம் ஆதித்தனைக் கண்டபனிபோலப் பறந்துபோகும் என்பது திண்ணம். நாயகன் நாயகி ஆகிய இருவருக்கும் உயிர் ஒன்றே எனத்தக்க அன்பாகிய பாசத்தை ஈஸ்வரன்கொடுத்திருக்கிறார். இந்த அன்புபற்றியே இராமர் வனசஞ்சாரம் செய்யும்படி புறப்பட்டபோது தமமனைவியாகிய சீதாதேவியைப்பார்த்து "என் கண்மணி, நான் இக்கஷ்டங்களை அனுபவிக்கக் கடவுளால் நேர்ந்தது. நீ என் அரண்மனையிலேயிருந்து என்னுடைய சகோதரர் ஆகவேண்டிய சகலவிதமான உதவிகளையுஞ் செய்துவரும்படி கட்டளையிடுவேன்" என்றாராம் இதைக்கேட்ட சீதாதேவி மனம்வருந்தி என் அருமைக் கணவரே, நீரில்லாத அரண்மனை எனக்குப் பாழ்வனம். நீர் தங்கும் பாழ்வனம், எனக்கு அரண்மனை, நீர்நடக்கும்பாதைகரடுமுரடு ஆன முட்காளாயிருந்தாலும் அது என்கால்களுக்குப்பஞ்சுமெத்தைபோல் இருக்கும், என்று இவ்வாறு சொல்லித்தன் நாயகனின் அனபேமுக்கியமென்று மற்றைச் சிலாக்கிய பாக்கியங்களை அற்பமென்றும் எண்ணித் தன் நாயகனோடு ஏகினாளாம். ஆகையால் புருஷன் அன்பாகச் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் செய்யும் ஒவ்வொரு உதவியும் அவருடைய புன்னகைகளும் மனைவியின் இருதயத்துக்குள் புகுந்து மகிழ்ச்சியை ஆக்கி அவள் முகத்தை மலரச்செய்து அவள் முழு உடம்பையும் பூரிப்பிக்கிற அமிர்த நதிபோல இருக்கும். இந்த நிலைமை மிகவும் மகிழ்ச்சியான நிலைமைதான். ஆனல் நற்கந்தமும் அழகும் பொருந்திய மலர்களைத் தருகிற ரோசாவுக்கு முட்களிருக்கின்றன போலவும் இல்வாழ்க்கை இன்பத்துக்குள் அமர்ந்து இருக்கிற புருடபாரியருக்கு அனேகவித சோதனைகளும் துன்பங்களும் உண்டாகும். இன்பம் வரும்பொழுது எப்படி அனுபவிக்கிறார்களோ அதுபோலவே துன்பங்களையும் அனுபவிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். நன்மை தீமை என்னும் இரண்டும் எங்களுக்கே உரியன இவைகளெல்லாவற்றையுஞ் சகித்து நடந்து கொள்ளாமையால் வருஞ் சஞ்சலத்தை அடையும்போது அதை எங்கள் விதி என்றுசொல்லிவிட்டு அதை நிவர்த்திக்கவழிதேடாமல் சிலர் நிர்ப்பாக்கியத்தை எக்காலமும் நிலைத்திருக்கச் செய்கிறார்கள். கஷ்டப்படாமல் சுகமாய்த் தங்கியிருக்கும் வீடுகிடைக்குமா? கஷ்டமேயில்லாமல் கல்விமானுதல் கூடுமா? கஷ்டமேயில்லாமல் ஆழமானகிணற்றுள் இருந்து தண்ணீர் வீடுவந்துசேருமா? அதுபோல, புருடபாரியரும் தங்களையே பிரீதிசெய்துகொள்ளல் வேண்டும் என்னும் ஆசையை எவ்வளவு கஷ்டப்பட்டாயினும் வென்று ஒருவர் பிரியத்தை மற்றவர்நிறைவேற்றப்பிரயாசப்படவேண்டும், நாயகனுக்குக்கோபம்வரும்போது தானும் எதிர்த்து நில்லாமல் அமைதியும் சாந்தமும் சந்தோஷமுமான பேச்சால் கோபமுண்டவர்களைமேற்கொள்ளல் வேண்டும். இவ்விதமாய் நடப்பவர்களே இம்மையில் இல்லறமாகிய அளவிறந்த இன்பத்தையும் மறுமைப்பயனையும் அடைவார்கள். ஆகையால் ஒருமுறை பேசுமுன் இருமுறையோசி என்ற பழமொழிப்படி யோசித்துப்பேசும் வழக்கம் இருந்தால் எத்தனையோ சண்டைகள் பிரிவினைகளைத் தடுக்கலாம். இப்படியோசியாமற் சொல்லும் சிறுகோபமான வார்த்தைகள் புருடபாரியரின் அன்பாகிய கட்டை அவர்கள் கண்டுணர்குத் தெரியாமல் அறுத்துவிடும் கூர்மையானகத்திகளாயிருக்கின்றன, அன்பாகிய கயிறு பெலவீனப்பட்டால் புருஷன் மனைவி இருவரும் நிர்ப்பாக்கியத்துக்கு ஆளாகவேண்டிவரும். புருஷனும் மனைவியும் இல்லறமாகிய பெருஞ் சமுத்திரத்தில் அணிந்து செல்லும் கப்பலின் மீகாமனுயிருக்கிறார்கள். விடாமுயற்சியோடும் புத்தியோடும் கப்பலை அக்கரை சேராவிட்டால் மலைபோல் எழும்பும் அலையில் அடிபட்டு சமுத்திரத்திற்கு இரையாவார்கள்.

அரிதரிது மானிடராதல் அரிது அதிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறப்பது அரிது. என்னும் பாட்டிற்கிணங்க பஞ்சமாபாதகருக்கு ஆளாகாமல் ஏகபத்தினி விரதத்தை அனுஷ்டித்து "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்னும் திருவள்ளுவர் வாக்கின்படி நடத்தல் உத்தமமான ஆண்மகனின் குணமாகும். மனைவி ஆனவள் "பெண்ணிற் பெருந்தக்கயாவுளத் பெண்ணுட்-கிண்மையுண்டாகப் பெறின்" என்றபடி, அச்சம்-மடம்-நாணம்-பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் பொருந்தினவளாம். மேலைத்தேசநாகரீகங்களை வெறுத்து நளாயினி தமயந்தி, சீதாதேவி, அருந்ததி, முதலாயினோரின் சரிதைகளைப்படித்துத் தனது நாயகனோடு இனிதுவாழ்வதே பதிவிரதாதர்மத்திற்கு ஒழுங்காகும். இவர்களே எவியுகவரதனின் திருவருளைப்பெற்றுத் தீர்க்கபாக்கியங்களையும் அனுபவிப்பார்கள்.

## பெண்கள் கடமை.

பலோலி
பண்டிதை ஸ்ரீமதி ந பத்மாசனிஅம்மாள்
எழுதியது.

காலத்துக்கேற்ற கோலமாக நம் நாட்டுப் பெண்கள் மிக்க சீர்கெட்ட நிலையிலிருக்கிறார்களென்பது யாவரும் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதி லுணரக்கிடக்கதொன்றாகும். இந் நிலைக்குக் காரணம் நம்மவர்கள் தத்தமக்குரிய சீரிய ஒழுக்க வழக்கங்களைக் கைவிட்டமையே யென்பது ஆய்ந்துநோக்குழி நன்குபுலனாகும். ஒரு தேசத்தவர் தம் நாகரிகத்தை யறிவுறுத்துவது அத்தேசத்திய பெண்கள்தம் செயலே யென்பர் பெரியார்.

பண்டைத் தமிழ் மக்கள்தம் ஒழுக்க வழக்கங்களெல்லாம் அந்நியநாட்டார்தம் கூட்டுறவால் முறைபிறழ்ந்துவிடத்தலால் நம்மவர்கள் தத்தமக்குரிய நாகரிகம் இன்னதென் றுணரமாட்டாது தத்தம் மனம்போனபோக்கின்படி பலப்பல துறைகளிலு மொழுகிவருகின்றனர். பண்டைக்காலத்தில் நமது நாடே பிறநாட்டாருக்கு நாகரிகத்தை வழங்கியுள்ள தென்பது சாஸ்திர ஆராய்ச்சியாற் கண்டு தெளிந்த ஒரு முடிபாகும்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்னுந் தெய்வத் திருநாவலர் மெய்யுரையின்படி பெண்களுக்குச் சகல மேன்மைகளையுங் கொடுப்பது கற்பென்றுசொல்லப்படுஞ் சிறந்த பூஷணமே. ஆங்கதனை நனிபோற்றவேண்டியது நமக்குரிய முதற்கடமையாகும். அத்திரி முனிவரன் பத்தினியாரம் அநசூயை, மும்மூர்த்திகள் தடிப்பவும் தொண்டூழைப் பணிகொண்டதும், திரௌபதாதேவி மானபங்கம் வாராது தம்மைக் காப்பாற்றியதும், நாளாயினி பொழுது விடியாதிருக்கச் செய்ததும் கற்பின் மகிமையா லன்றோ? இத்தகைய பதிவிரதா சிரோன்மணிகளையே பெரியோரும் புகழ்ந்துரைத்திருக்கின்றனர். இற்றைக்கும் இவர்களைத் தெய்வமெனக்கொண்டு நம்மவர் வழிபடுவதை யாம் காணலாம். இவர்களே நம்நாட்டிற் கண்கண்ட தெய்வங்களாவர்.

நாம் என்றைக்குக் கற்பென்னும் சீரிய அணியை யிழந்தோமோ அன்றைக்கே நமது உயிர் உடம்பு முதலெவற்றையு மிழந்தவராவோம். அநுமானவர் இலங்காபுரியில் சீதாதேவியைத் தேடிச்சென்ற அந்நாளில் இராமனது பத்தினியாம் வண்டோதரியைக் கண்டு ஜானகியம்மையாரமென வியிர்த்துக் கூறினர்,

"எற்புவான்றொடர் யாக்கையாற்
பெறும்பயனிரக்தனன்றுநீற்க
அற்புவான் றளையிற்பிறப்பதனொடு
மிழந்துதன்னருந்தெய்வக்
கற்புநீங்கியகனங்குழையிவளெனிற்
காகுத்தன்புகழோடும்
பொற்பும்யானுமில் லிலையுமாக்கரும்
பொன்றுதயின்றென்றான்"

என்னுமிக் கவிதை வாசிப்போர்க்கு அக்காலத்து பெண்களும் ஆடவர்களும் கற்பினை யெவ்வாறு போற்றிவந்தார்களென்பது நன்கு விளங்கும். ஆதலால் இத்தகைய பெருமை வாய்ந்த கற்பினைப் போற்றுதற்குரிய வழிகளை நாம் ஆராய்ந்து ஆங்கதன் முறையே நடத்தல் வேண்டும்.

அவ்வாறே ஆராயுங்கால் "காவல்" என்பதே சிறந்ததொரு வழியாகும் "காவலுனே பாவையர்க்கழகு" என்றார் நம் மூதாட்டியாராகும் ஔவைப் பிராட்டியாரும். இக்காவல் நிறைகாவல் சிறை காவலென இருவகைப்படும். நிறைகாவல் என்பது தன்னைத்தானே காத்துக்கொள்ளுதல், சிறை காவல் என்பது தாய் தந்தையர் முதலானோர் தங்காவல்; இவ்விரு காவலுக்குமிடையே நாம் அமைந்து நடந்தால் கற்புக்குப் பங்கம் வாராத வண்ணம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளலாம். ஆயினும் இவற்றுள் மிகச் சிறந்தது நிறை காவலே. சிறை காவல் எவ்வளவு கடினமாயிருந்தபோதும் ஒரு பெண் அக்காவலைக்கடந்து தன் இஷ்டப்படி நடந்துகொள்ள வியலும். நிறைகாவல் இருந்தாற் சிறைகாவலின் றெனினும் தம் கற்புக்கடைகாக்கவியலும். இதனாலன்றோ;

"சிறைகாக்குங்காப்பெவன் செய்யுமகளிர்
நிறைகாக்குங்காப்பே தலை"

பெண்களுக்கியல்பாயுள்ள நாணம், மடம், அச்சம் பயிர்ப்பு என்று சொல்லப்படுகின்ற நாற் குணங்களுமே அவர்களைக் காக்கும் நிறை காவலாகும். நாணம் என்பது வெட்கம், மடம் என்பது மடமைக்குணம்; அச்சமென்பது ஆடவர் முன் தனிநிற்றல் முதலியவற்றிற் கஞ்சுதல், பயிர்ப்பு என்பது பயிலாதபொருட்கண் அருவருத்து நிற்கும் நிலை. இவைகளில் மிகச் சிறந்த குணம் நாணமே; ஈங்கிதனை நம் சமயகுரவராம் மாணிக்கவாசக சுவாமிகளும் திருச்சிற்றம்பலக் கோவையாரில் "தாயிற் சிறந்தன்று நாணுடையலார்க்கு" என வியந்துரைத்தருளி யிருக்கின்றனர். நாணம் என்னும் இச்சீரிய குணமில்லாதவரைப் பெண்கள் என உரைத்தலுமிசையேயாகும்.

## மகப்பேறும் கல்விப்பயனும்.

இவ்வுலகின்கண், மனிதர் தமது வாழ்க்கைக்கு வேண்டப்படும் சகலசம்பத்துக்களையும் வைத்துச் சக்கராதிபத்தியம் செய்தபோதிலும், தனக்குப் பின் தன் குலத்தையும், சீர்மையும் விளக்குவதற்கான ஓர் சற்புத்திரனைப் பெற்றிலராயின், வந்துபொருந்திய செல்வங்களினாலும் வீரம், வனப்பு, சத்தியம், புயபலம், மனோதிடம் முதலிய பெருமைகளினாலும் எவ்வளவு இன்பங் காணக்கூடுமோ வென்பதை ஆராயும்பொழுது, இம்மியளவேனுமின்றி இக்குடும்ப வாழ்க்கை பிரயோசனமற்றிருப்பதைக் காணலாம். ஓர் புத்திரனை விரும்பிக் கோயிலைக் கட்டுவதும், குளத்தை வெட்டுவதும், அறச்சாலையமைப்பதும், உடல் நலிய விரதங்காப்பதும், தீர்த்தயாத்திரை ஸ்தலயாத்திரைகள் செய்வதும் இன்னும் பல அரிய பிராயத்தனங்களெல்லாஞ் செய்துவருகின்றார்களென்பதையும் அறியாதார் யார்? இவ்வித நித்திய விரதங்களை யனுட்டித்தும் தங்கள் எண்ணங் கைகூடப் பெறாதவர்களாய்ப் புத்திர சோகத்தோடு மாண்டு இறந்துபோனவர்களுங் கொஞ்சமோ? இதுவன்றி, செறிநின்று செங்கோலோச்சிய முடிமன்னர் தாமும் நாடுநகர் யாவையுந் துறந்து ஓட்டாண்டிகளாய்க் காட்டகஞ் சென்று கடுந் தவஞ் செய்தார்களாம் என்றால், புத்திர சந்தானத்தின் பெருமையை இவ்வளவென்றெடுத்துரைக்க யாரால் முடியும்?

இனி, கடவுளிரக்கத்தினாலும் செய்தவத்தின் பலனாலும் ஒருவாறு புத்திர பாக்கியம் கிடைத்ததாயினும், அத்துடன் புத்திரசோகந் தணிந்துவிட்டதாய்த் துணிவதற்கில்லை. ஏனெனில்,

"ஈன்றபொழுதிற்பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்"

என்றபடி நற்குண நற்செய்கைகளையுடையவனாய் "இவன பொருட்டு இவன் தாய் தந்தை என்ன தவஞ் செய்தார்களோ?" என்னும்படி பிறர் சொல்வதற்கு இலக்காயிருந்தால் மாத்திரமே ஆண் மகவென்றுநித்த போதிருந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சியடைவர்.

அங்ஙனமின்றிப் பெற்றோருக்கும், மற்றோருக்கும் வசையுண்டாக்கித் தானும் நல்வழிப்படாமல், கண்டோரிகழும்படி பழி பாவங்களுக்கஞ்சாத துட்டனாக விருந்துவிட்டால்,

'அச்சமுள் ளடக்கி யறிவகத்தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந்திருத்தல் நன்றே'

என்றபடி பெற்றோர்கள் தம் புத்திரரால் குதூகலமடைய வேண்டுவது விதியாயிருக்க அதற்கு மாறாகச் சதா துக்கமே விளையுமாயின், அதைவிடத் தமக்குப் புத்திரனேஇல்லையென்ற கவலையோடு முன்போல் தவமியற்றி வருதலே நன்றாம். தனக்குரிய செல்வங்கட்குச் சிறப்பைத் தந்து நிற்பது தத்தம் புத்திராதல் பற்றியே நாயனாரும்,

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்றது போற்றத் தக்கது. இனி, நல்லதோ பொல்லதோ ஒரு புத்திரனாயினும் இல்லாவிட்டால் மோக்ஷமில்லை என்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தோ! இது பெரிய பயங்கரமும் பரிதாபமுமான வார்த்தை. தாந்தாம் "கருதிய வாறுமோ கருமம்?" புத்திரரில்லாவிட்டால் மோக்ஷமுமில்லை என்பதை ஏனென்று கேட்கிறபொழுது, தாய் தந்தையரிறந்தபின் அவர்களைக் குறித்துப் பிள்ளைகளாற் செய்யப்படும் அபரக்கிரியைகளினால் தங்கள் [illegible] நீங்கிப் புண்ணிய மெய்துவார்[illegible] விடை கிடைக்கின்றது. இதை[illegible]ருக்குப் "பிள்ளைகளாற் செய்யப்படு[illegible] கிரியைகளின் பலன இறந்துபோன [illegible]ற்றோருக்குப் பயன்படுவது எங்ஙனம்?" என்ற சந்தேக முதிக்கின்றது. ஆனால் தன் சந்ததியார் அறுபதினாயிரம் பெயரையும் அரிய முயற்சியினால் நரகத்தினின்று மீட்டதாகக் கூறும் பகீரதனை நினைப்போமாயின் மேற் சந்தேகம் எழவேமாட்டாது. இன்னும் சற்புத்திரரைப் பெறுவதனால் தாய் தந்தையர் நற்கதியடையக் கூடும் என்பதற்கு,

"எழுபிறப்புந் தீயவைதீண்டாப்பழிபிறங்காப்
பண்புடைமக்கட்பெறின்" என்ற

நாயனார் திருவாக்கும் வலியுறுத்தும். ஆனால், தாந்தாம் செய்தவினை தமக்கேயுரித்தெனபது பொது வழக்கேயாயினும், எற்போனது புண்ணியவசம் இடுவோனது உள்ளத்தை இளகச் செய்வதுபோல் விதிக்கப்பட்ட கிரியைகளைச் சிரமத்துடன் செய்யக்கூடிய சற்புத்திரன் வந்துவாய்க்கப்பெறுவதும், அக்கிரியைகளுக்குக் கட்டுக்காரணராகிய பெற்றாரின் புண்ணியவசமேயன்றி வேறல்ல. இதுகாரணம்பற்றியே தம்புத்திரர் இம்மைமறுமைப் பயனையடைதற்குமாய் அவர்களுக்குச் சிறுபாராயத்திலேயே அவசியங்கல்வியறிவையூட்டவேண்டுமென்றமை பெற்றோர்களைப் பொறுத்தகடனாயிற்று. அன்றி, மிருக இச்சைக்கு விவாகத்தையும் பட்டகடனுக்குப்புத்திரரையும் வேண்டுமென்றுகருதினால்லர். இதுவே அவர்களின் திருவுளத்து விருத்தியாகிவந்த மேலாகிய நோக்கமுமாம். ஆனால், தற்காலக்கல்வியின் நோக்கத்தைச்சிறிது ஆராய்வோமாயின் மேற்கூறியவற்றிற்கு முழுதும் முரண்பட்டதாகவே காண்போம். பிள்ளைகள் வளரவேண்டியதுதான் தாமசம்; 5, 6, 7, வயசாய்விடவேண்டும்; நாள் நக்ஷத்திரமும் பார்க்கவேண்டியதில்லை தலைரோமத்தைத் தானங்கொடுத்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடவேண்டியதே. அங்கே அகரம் முதல் னகாரீறாய் வரும் அரிவரி எழுத்துக்கள்யாவையும் நன்றாய் மனதிற் பதியும்படி போதிக்கப்படுகின்றன எழுத்துக்களின் உருவங்கள் சரியாய்ப் பிடிபட்டதென்றறிந்ததும் இருசொல்வாக்கியம், முச்சொல்வாக்கியம், நாற்சொல்வாக்கியம் போன்றகூட்டெழுத்துக்கள் ஊட்டப்படுகின்றன. இதிலிருந்தே எ, பி, சி, டி என்ற ஆங்கிலச் சொற்களையும் இதனோடு பிணைத்துக்கொண்டு மெத்தப்பரபரப்போடும்பிடித்தேறப்படுகிறது.

ஒருவன், இலகுவில் ஏறமுடியாத ஓர் மாத்தின்கனியை இச்சித்தால் ஏணி சாத்தியாவது கயிற்றினைமாட்டியாவது அம்மரத்தில் ஏற முயல்கின்றான். அங்ஙனம் ஏறும்பொழுது கைகளுக்கு ஏதாவது பிடிமானங்கிடைத்தவுடனே ஷை ஏணியை அல்லது தளைக்கயிற்றை நழுவவிட்டுக் கருதிய கனியிலே மனதைச் செலுத்திவிடுகிறான். அதுபோலவே இவர்களும் துணைக்கருவியின்றிக்கற்கமுடியாதஆங்கிலபாஷையென்னும் மரத்தின் உத்தியோகமென்னுங்கனியைப் பெற்று ஊதியமென்னும்ரசத்தையுண்டு உலகபோகமென்னும் ஆநந்தத்திலிருப்பதற்காக நந்தாய்மொழியை ஏணிபோற்பாவித்து ஆகரவைக்கைக்கொண்டதன்பின் இடரென அலட்சியஞ்செய்து விட்டுவிடுகிறார்கள். இதுதான் தற்காலத்திய கல்வியின் நோக்கமும்பயனுமாய் முடிகிறது. இந்த நிலைபாத்திலிருக்குமளவும் நம்மவரிடத்துத் தேசாபிமானமோ பாஷாபிமானமோ மதாபிமானமோ எதுவுமே விருத்தியடைவதற்கு ஏதுவில்லை. இன்னுஞ்சிறிது காலத்திற்குள் தமிழ்மணமே இல்லாதொழிந்துவிடுமோ என்ற சந்தேகமுதிக்கின்றது. தமிழ்ப்பாஷையில் அபிமானமுள்ள கனவான்கள் சிறிதே சிந்திப்பார்களாக.

கா. க. தனபாலன்,
மானிப்பாய்.

## அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

—:O:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு செ. நா. செ. சாமிநாதஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ அக்டோபர்மீ

| நம். | தி. | ரூ. சதம் | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 4705 | 19 | 70 | வழலாய் சபாபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை பொன் பதக்கத்துடன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 4709 | 20 | 30 | குசவன்குளம் கணபதிப்பிள்ளை கந்தையா பொன் பட்டணக்காப்பு 1 |
| 4711 | 21 | 75 | சுன்னாகம் நாகன் வயிரவி பொன் பட்டணக்காப்புச்சோடி 1 பிள்ளைக்காப்புச் சோடி 1 மோதிரம் 1 |
| 4725 | 24 | 40 | குசவன்குளம் அருணாசலம் வேலுப்பிள்ளை பொன் ஒருபட்டு குண்டுச்சங்கிலி 1 பிள்ளைக்காப்புச்சோடி 1 |
| 4727 | 24 | 20 | கொக்குவில்கிழக்கு வல்லிபுரம் சின்னியப்பர் பொன் பின்கோர்க்கி 1 |
| 4750 | 25 | 65 | வண்கிழக்கு பழனி சதாசிவம் பொன் டிம்மியுடன் கம்பிப்பூராணட்டியல் 1 அச்சாக்கூடு 1 |
| 4767 | 26 | 20 | வண்கிழக்கு தம்பிநாதர் வயிரமுத்து சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 4769 | 26 | 40 | நைனார்தீவு கணபதி இராமுப்பிள்ளை பொன் தாலிக்கொடி 1 |
| 4772 | 28 | 25 | சுண்டிக்குளி பசுபதி செல்லையா பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 4776 | 29 | 110 | சரவணை முருகப்பர் நாகலிங்கம் பொன் கெட்டிக்கொலிசுக்காப்புச் சோடி 1 |
| 4780 | 29 | 40 | சோனகதெரு வா. சு. முகம்மது அப்துல்காதர் பொன் சவடிக்கொடி 1 |
| 4796 | 31 | 20 | நல்லூர் சிதம்பரப்பிள்ளை திருவிளங்கம் சிகப்புக்கல் காதோலை சோடி 1 |
| 4797 | 31 | 140 | சரவணை முருகப்பர் நாகலிங்கம் பொன் தாலிச்சங்கிலி 1 |
| நவம்பர்மீ | | | |
| 4800 | 1 | 70 | சுதுமலை சின்னத்தம்பி காசிப்பிள்ளை பொன் பிள்ளைக்காப்புச் சோடி 1 அரைஞாண்கொடி 1 தாலிக்கொடி 1 |
| 4804 | 1 | 60 | சிவன்கோவிலடி சின்னியர் சொக்கலிங்கம் பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 4805 | 1 | 140 | சிறும்பியடி கந்தையா சின்னத்தம்பி பொன் தாலிச்சங்கிலி 1 |
| 4815 | 1 | 50 | திருநெல்வேலி சுப்பிரமணியம் செல்லையா பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 4817 | 2 | 60 | சுண்டிக்குளி முருகப்பர் பொன்னையா பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 4829 | 3 | 150 | உடுவில் சங்கரப்பிள்ளை ராசா பொன் பூக்காப்புச்சோடி 1 |
| 4839 | 5 | 40 | கோண்டாவில் வேலுப்பிள்ளை நாகலிங்கம் பொன் கைச்சங்கிலி 1 |
| 4840 | 6 | 50 | சிறும்பியடி வேலுப்பிள்ளை அமரசிங்கம் பொன் பூக்காப்புச்சோடி 1 |
| 4887 | 11 | 35 | மூளாய் தாமு கணபதிப்பிள்ளை பொன் அட்சரக்கூடுடன் கொடி 1 |
| 4908 | 13 | 95 | கரையூர் தேவசகாயம் கைம்பெண்விக்டோரியா பொன் கைச்சங்கிலி 1 அவல்மாலை 1 ஒருகல்மோதிரம் 1 |
| 4921 | 15 | 45 | கோப்பாய் பூதர் வல்லிபுரம் பொன் கம்பிப் பூராணட்டியல் 1 |
| 4924 | 15 | 35 | சோனகதெரு அ. சேகுமரைக்காயர் பொன்பிள்ளைக்காப்புச் சோடி 2 மணிக்கோர்வை 1 |
| 4928 | 15 | 55 | நாவாந்துறை செல்லையா ஆச்சிமுத்து பொன் டிம்மியுடன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 4931 | 15 | 700 | திருநெல்வேலி கந்தர் சுப்பையா பொன் ஒட்டியாணம் 1 சங்கிலி 1 பூக்காப்புச் சோடி 1 |

விற்பனவு:— குரோதனஆ மார்கழிமீ 12உ (26-12-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 768.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு கா. சி. ச. மும. முத்துக்கிருஷ்ணநாயுடுவிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம். | தி. | ரூ. | ஊர் பெயர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 1924ஆ ஆகஸ்டுமீ | | | |
| 1296 | 29 | 57 | வண்கிழக்கு ஐயாக்குட்டி சரவணமுத்து பொன் பின் முகப்புடன் கொடி1 |
| செப்டம்பர்மீ | | | |
| 1313 | 4 | 30 | இணுவில் கைப்புளியடி சுப்பிரமணியம் வல்லிபுரம் இரட்டைக்கிளிகைப்புக்கல் 2பக் கைச்சங்கிலி 1 |
| 1336 | 13 | 30 | மானிப்பாய் காசமுத்து வேலுப்பிள்ளை பொன் வடமன் காப்புச் சோடி 1 |
| 1342 | 14 | 60 | கரையூர் மனுவல் பாவிலு பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 1343 | 14 | 110 | வண்ணார்பண்ணை கப்பையா ராமலிங்கம் பொன் கெட்டிக்கொலிசு சோடி 1 |
| 1363 | 19 | 60 | வண்ணார்பண்ணை கப்பையா ராமலிங்கம் பொன் கொலிசுச்சோடி 1 |
| 1378 | 21 | 160 | வண்ணிமுக்கு வள்ளி கந்தன் பொன் சங்கிலிக்கொடி 1 |
| டிசெம்பர்மீ | | | |
| 1405 | 2 | 55 | சரவணை கதிரேசு வைத்திலிங்கம் பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 1406 | 2 | 60 | சரவணை ஆறுமுகம் செல்லப்பா பொன் முகப்பில்லாத சங்கிலி1 |

விற்பனவு:— குரோதனஆ மார்கழிமீ 2உ (16-12-25) புதன்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
(Mis. 766.) வெந்திஸ்மேஸ்தர்.


## தமிழ் வாசிப்போர்
## இங்கிலீஷ் பேசுதற்குக் கற்கும்வழி
அல்லது
## ஆங்கிலேய ஆசிரியன்.



அன்பர்காள்!

நமது இந்தியா வாசிகள் இங்கிலீஷ் வாசித்து உத்தியோகஞ் செய்வதென்றால் வெகுகாலமாகிறது. அன்றியும், ஒவ்வொரு ஆபீஸில் துரைகள் அவசரமித்தமாய் இங்கிலீஷ் பேசினால் அதனுடைய விபரந் தெரியாமல் தவிக்க, உடனே டிஸ்மிஸ் செய்துவிடுவதினால் ஜீவனமில்லாமல் கஷ்டப்படும் நண்பர்களுக்கு வெகு சுலபமாக இங்கிலீஷ்பேசுவதற்காக யாங்கள் அநேகமுயற்சியெடுத்து முக்கிய பதங்களும் பேசுவதற்குரிய வாக்கியங்களும்தமிழ் எழுத்திலும்இங்கிலீஷ் எழுத்திலும் அமைத்து இன்னின்ன வாக்கியத்திற்கு இன்ன அர்த்தமென்று இங்கிலீஷுக்குரிய தமிழ் வாக்கியம் வரைந்து அச்சிட்டிருக்கின்றோம். இதனை வாங்கி வாசிக்கும்நண்பர்களுக்கு1 மாதத்திற்குள் இங்கிலீஷின் மர்ம ரகஸ்ய வார்த்தையையெல்லாம் தெளிவாய்க் கற்றுக்கொண்டு துரைகளிடத்திற் தெளிவாய்ப் பேசுதல் முடியும்.

இதன் விலை ரூபா 1—8—0;
வி.பி. தபாற்சார்ஜ் 0—4—0.

விலாசம்:—

டி. ஆனந்தாசிரியபுத்தகசாலை,
நெ. 5-34,
நயினியப்ப நாய்க்கன் தெரு,
(M 39.) பார்க் டவுன் போஸ்டு, மதறாஸ்.


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.